விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 04 சனிக்கிழமை (21.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 306

நூலகம்

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## உள்ளூராட்சி தேர்தலை அரசு பிற்போடுகின்றது

### எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்தாமல் பிற்போட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார். 23

# தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுமோ தெரியாது

## ஜனாதிபதியே இறுதி முடிவெடுப்பார் யாழில் சுவாமிநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நல்லாட்சி அரசாங்கம் நிறைவேற்றுமா? என்பது எனக்கு தெரியவில்லை என தெரிவித்துள்ள மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் இது தொடர்பான இறுதி முடிவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே எடுக்க வேண்டும் என யாழில் வைத்து தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## உணவு தவிர்ப்பை கைவிடுவதில்லை கைதிகள் உறுதி

(அநுராதபுரம்)

அநுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு தமது வழக்கு மாற்றப்படும் வரையில் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர். 23

## யதார்த்தத்துடன் செயற்படுங்கள்

### டில்லியில் அறிவுரை

(டில்லி)

வடக்கு மாகாணசபை யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்வர வேண்டும் என்று டில்லியில் நடத்தப்பட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற் 23

## தேரர்களின் ஆலோசனையை அரசு கைவிடவேண்டும்

### தேசிய சுதந்திர முன்னணி

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு தொடர்பில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் நிலைப்பாட்டை அரசாங்கம் கைவிட வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

அந்த கட்சியின் பிரதிச் செயலாளரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான நிமல் பிரேமவன்ச கட்சி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகச்சந்திப்பில் இதனை 23

## கனகராயன் பொலிஸ் பிரிவில்

## காரில் நுட்பமான முறையில் கஞ்சா கடத்தல் முறியடிப்பு



(மல்லாவி)

கனகராயன்குளம் பொலிஸ் நிலையப்பிரிவில் ஏ9, வீதியில் விசேட வீதிப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற் 23

## உடல் முற்றிலும் சோர்வடைந்து ஆபத்தான நிலையில் அரசியல் கைதிகள்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் உள்ள அரசியல்கைதிகள் எழுந்து நடக்க முடியாது, உடல் முற்றிலும் சோர்வடைந்து ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் 27 ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பாக எந்த தரப்பினருடைய கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படாதவிடத்து அவர்கள் தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

இதில் உறுதியான முடிவு எவையும் எட்டப்படாத நிலை 23

## ஜனாதிபதியுடனான சந்திப்பு திருப்தியில்லை

## தமிழ் அரசியல் கைதிகளுக்காக வகுப்பு புறக்கணிப்பு தீர்மானம்

### மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளினதும் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதியுடன் நாம் மேற்கொண்ட சந்திப்பானது திருப்தி அளிக்கவில்லை என்வும் அது ஏமா 23

## சிங்களே இயக்கத்தின் பொதுச்செயலாளர் கைது!

(கொழும்பு)

மியன்மார் ஏதிலிகளுக்கு எதிராக அண்மையில் அல்கிஸ்ஸை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் சிங்களே தேசிய இயக்கத்தின் பொது செயலாளர் அரம்பேபொல ரதனசார தேரர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். 23

## 25 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே இறுதிப் போரில் உயிரிழந்தார்களாம்



### நிமால் சிறிபால டி சில்வா புதுக்கதை

(கொழும்பு)

கடந்த 10 ஆண்டுகளில் நாடு முழுவதும் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் 25 ஆயிரத்து 624 பேர் இறந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அரசு இந்த எண்ணிக்கை வடக்கில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்டோரிலும் அதிகமாகும் எனக் குறிப்பிட்டுள்ளது. போக்குவரத்து சட்ட ஏற்பாடுகளில் புதிதாக 23

## தலைமன்னாரில் இந்திய மீனவர்கள் ஏழு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிய நுழைந்த தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் ஏழுபேர் நேற்று இரவு இலங்கை கடற்படை 23

## ஜனாதிபதியின் பதிலுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றோம்

### அரசியல் கைதியான சுலக்சனின் தாயார்

(கரணவாய்)

ஜனாதிபதியின் பதிலுக்காக தாம் காத்திருப்பதாக அரசியல் கைதியான மதியரசன் சுலக்சனின் தாயார் வலம்புரிக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

வவுனியா நீதிமன்றில் நடைபெற்ற வழக்குகளை அநுராதபுரம் நீதிமன்றிற்கு மாற்றியதனைத் தொடர்ந்து மூன்று அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவருகின்றனர்.

## கைதிகள் உண்ணாவிரதமிருக்க

## அரசின் விருந்துபசாரத்தில் தமிழ் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பு திருப்தியளிக்காத நிலையில் அவர் எமக்கு வழங்கவிருந்த விருந்துபசாரத்தை நாம் புறக்கணித்த நிலையில் ஜனாதிபதியால் நடைபெற்ற தீபாவளி இராப்போசனத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டிருந்தமை தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமது அதிருப் 23

## ஓட்டோ ஓடுவதற்கு புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)

முச்சக்கரவண்டிகளில் கட்டணத்துக்கான வாசிப்புமானி பொருத்தப்படுவது அவசியம் ஆகும். 35 வயதுக்கு குறைந்த சாரதிகள் வாடகைக்கு முச்சக்கரவண்டிகளை செலுத்தாத வகையில் சட்டங்கள் கொண்டுவரப்படும். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட
# யாழ். பல்கலை மாணவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

பொலிஸாரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட இரு யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நினைவு தினத்தை யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம் மற்றும் ஊழியர் சங்கம் ஆகிய இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

கடந்த 2016.10.20 ஆம் திகதி சுன்னாகத்திலிருந்து வரும்போது கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் வைத்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான நடராஜா கஜன், விஜயகுமார சுலக்ஸன் ஆகிய இருவரும் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

இதனை ஆரம்பத்தில் விபத்தாக பொலிஸாரால் மறைக்க முயற்சித்த போதிலும், பிரேத பரிசோதனையின் போது குறித்த மரணம் துப்பாக்கியால் சுட்டதால் நிகழ்ந்தது என கண்டறியப்பட்டது. இதனை அடுத்து ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில், அவர்கள் மீதான குற்றச்சாட்டு பத்திரம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்படாத நிலையில், யாழ்.மேல் நீதிமன்றம் அவர்களை பிணையில் செல்ல அனுமதித்திருந்தது.

இந்த நிலையிலே நேற்றைய தினம் குறித்த மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டு ஒருவருடங்கள் நிறைவடைந்துள்ளது. இதனை யாழ். பல்கலைக்கழக மாணவ மாணவிகள் நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நினைவு கூர்ந்துள்ளனர்.

இதன் போது மாணவர்கள் அனைவரும மெழுகுவர்த்தி ஏந்தி, மலர் அஞ்சலி செய்திருந்தனர். இந்த நினைவஞ்சலியில் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.(மு-4)

# முல்லையில் 7 யுவதிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம்



முல்லைத்தீவு தண்ணீரூற்று பகுதியில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஏழு திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. தண்ணீரூற்று ஊற்றங்கரை சித்தி விநாயகர் ஆலயத்திலேயே குறித்த திருமணங்கள் இடம்பெற்றுள்ளன.

திருமணம் முடிப்பதற்கு வசதியற்ற நிலையில் இருந்த யுவதிகளுக்கு நேற்றைய தினம். ஒரே ஆலயத்தில் மேற்படி திருமணம் வைபவம் இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கை இந்துமா மன்றம் மற்றும் சைவ முன்னேற்ற சங்கத்தின் லண்டன் கிளை ஆகியவற்றின் ஏற்பாட்டிலேயே குறித்த திருமண நிகழ்வு நேற்றைய் தினம் காலை வேளையில் இடம்பெற்றுள்ளது.

இல்லறத்தில் இணைந்துகொண்ட தம்பதியினரை அகில இலங்கை இந்துமா மன்றத்தின் பிரதம குருக்கள் உள்ளிட்டோர் ஆசிர்வதித்துள்ளனர்.

குறித்த நிகழ்வானது சைவ முன்னேற்ற சங்கத்தினரின் 40ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்டுள்ளதாகவும் இதனால வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வந்த ஏழு யுவதிகளின் வாழ்விற்கு நல்ல எதிர்காலம் கிடைத்துள்ளதாகவும் திருமணத்திற்கு வருகை தந்த மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.(ம-281-310)

# அரசியல் கைதிகள் தொடர்பில் ஆளுநர் எம்மை ஏமாற்றியுள்ளார்
## யாழ். பல்கலை மாணவர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக சாதகமான தீர்வொன்றை பெற்றுத் தருவதாக ஜனாதிபதியை சந்திக்க அழைத்து சென்ற வடமாகாண ஆளுநர் தம்மை ஏமாற்றியுள்ளதாக யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பாக தமக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திபொன்று நேற்றைய தினம் யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டிருந்தது. இச் சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார்கள்.

இதன்படி இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் சட்டபீட இறுதியாண்டு மாணவன் தனஜன் கருத்து தெரிவிக்கையில்,

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளினதும் கோரிக்கைகளையும் நிறைவேற்றக்கோரி யாழ்.பல்கலைகழக சமூகத்தால் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தது.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் நேரடியாக சந்தித்து கலந்துரையாடி அதற்கான தீர்வொன்றை பெற்றுத் தருவதாக கூறி வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே எம்மை ஜனாதிபதியை சந்திக்க அழைத்து சென்றிருந்தார்.

நாம் ஆளுநருடைய பேச்சை நூற்றுக்கு நூறு வீதம் நம்பியிருந்தோம். ஆனால் நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் எமது நம்பிக்கைகள் அனைத்து பயனற்று போயிருந்தன. ஏனெனில் எமக்கு தெளிவான பதிலொன்றை ஜனாதிபதி வழங்கியிருக்கவில்லை என அவர் தெரிவித்தார்.(ம-4)

# புதிய சிறைக்கூடம் அமைக்க அமைச்சரவை அங்கீகாரம்

மன்னார் மாவட்டத்தில் புதிய சிறைக்கூடம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கையின் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, மன்னாரில் சிறைக்கூடம் ஒன்றை அமைப்பதற்கான பத்திரத்தை அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் சமர்ப்பித்திருந்தார்.

இதன்போது, அந்த பத்திரத்தை சமர்ப்பித்து உரையாற்றிய சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி. எம்.சுவாமிநாதன் குறிப்பிடுகையில்,

வவுனியா மாவட்டத்தில் உள்ள சிறைச்சாலையில் இருந்து 85 கி.மீ தொலைவில் உள்ள மன்னார் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் சந்தேகநபர்களை நீதிமன்ற விசாரணைகளிற்காக தற்காலிகமாக, சுங்கத திணைக்கள அறை ஒன்றிலேயே தற்போது தடுத்து வைக்கப்படுகின்றனர். அதில் போதிய அடிப்படை வசதிகள் கிடையாது.

இதனைக் கருத்தில் கொண்டு, உப்புக்குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில், புதிய சிறைக்கூடம் ஒன்று அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற நிலையில் வெகு விரைவில் மன்னார் மாவட்ட நீதிமன்ற வளாகத்துக்கு அண்மையாக இந்த சிறைக்கூடம் அமைக்கப்படவுள்ளதாக மேலும் தெரிய வந்துள்ளது. (ம-15)

## விபத்தில் ஒருவர் காயம்

இரு மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 8 மணியளவில யாழ்ப்பாணம் மாம்பழம் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் அளவெட்டியை சேர்ந்த ராயேந்திரம் றஞ்ஜித்குமார் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.(ம-30)


## Blossoms மாதிரி முன்பள்ளி

**2018 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளல்**



**கடந்த காலங்களில்**

- சிறப்பாக வழிநடத்தலில்
- அனுபவமிக்க ஆசிரியர்களால்
- மிகச் சிறப்பாகக் குழந்தைகளை வழிநடத்தலில்-

**அனைவராலும் பிரமிக்கப்பட்டுப் பாராட்டுப் பெற்றது எமது Blossoms முன்பள்ளி**

**விண்ணப்ப முடிவுத்திகதி: 01.12.2017**

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே இருப்பதால் அனுமதிக்கு முந்துங்கள்

விண்ணப்பங்களை கீழ் உள்ள முகவரிகளில் பெற்றுக்கொள்ள முடியும்

**BLOSSOMS preschool** கோண்டாவில் No.189, புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு.

**BLOSSOMS முன்பள்ளி** அரியாலை இல.55/1 ஸ்ரான்லி லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.

**ஆறுதல்** இல.51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 0212217092



Let your child grow with us

உங்கள் குழந்தைகள் எங்களுடன் வளரட்டும்

(சி-123)

WESTERN UNION WU

moving money for better

அமெரிக்க லொத்தர் விசாக்களுக்கான பதிவுகளை முன்கூட்டியே எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம்.

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(சி-9990)

## வாகனங்கள் வாடகைக்கு

கார்கள், வான்கள் நாள் வாடகைக்கு சாரதியுடன் அல்லது சாரதி அல்லாமல் பெற்றுக் கொள்ளலாம்.

**0770295211**

**RP Rent a Car**

(1086)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.09.2017 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் இராசையா சூரியகுமாரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

360, உதயநகர் மேற்கு, [illegible]

இங்ஙனம் :
குடும்பத்தினர்

(சி-124)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அபிவிருத்தி வங்கி இலங்கையில் உருவாகும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கட்டியெழுப்பப்பட்ட நாட்டை பாதுகாத்து பொருளாதார ரீதியில் வலுவூட்டப்படுவதன் தேவையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய தேசிய வர்த்தகக் கொள்கை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. புதிய அபிவிருத்தி வங்கியொன்றும் உருவாக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்கால பொருளாதார நிலைமை குறித்து நேற்று பாராளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு பிரதமர் உரையாற்றினார்.

இதன்போது மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளை திருத்தி, நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்று பிரதமர் கூறினார். இதன் அடிப்படையில், நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையை குறைப்பதற்கும் வரவு- செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையை குறைப்பதற்கும் சமகால அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. அரசநிதி நிலைமை உறுதியானநிலையில்உள்ளது.

விற்பனை செய்யக்கூடிய வகையில், மூலப் பொருட்களை உற்பத்தி செய்வது குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. 2018- 2019 வரையான இரண்டு வருட காலப்பகுதியில் 3 இலட்சத்து 4ஆயிரம் கோடி ரூபா தொகையை கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

இதற்காக அரசாங் கம் இப்போதிருந்தே கடனுக்கான விசேட முகாமைத்துவ மூலோபாயங்களை வகுத்துள்ளது. சில சட்ட மூலங்களுக்கு திருத்தங்களை மேற்கொண்டு, அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய விநியோக வலைப்பின்னல் மேலும் விருத்தி அடைந்துள்ளது. உணவுப் பொருட்களுக்கான வரிகள் கடந்த காலங்களில் குறைக்கப்பட்டன. இதன் நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்கும்படி பாராளுமன்ற உறுப்பினர்களை பிரதமர் கேட்டுக்கொண்டார்.

2025ஆம் ஆண்டளவில் அறிவை அடிப்படையாகக் கொண்ட சமுதாய சந்தையின் மூலம் பொருளாதாரத்தை மேலும் கட்டியெழுப்பமுடியும் .

ஏற்றுமதித் துறையை மேலும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சிறிய மற்றும் மத்திய பரிமாண தொழில் முயற்சிகளுக்கு வெளிநாட்டு சந்தைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேமபடுத்தவும் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எதிர்வரும் மூன்று வருட காலத்திற்கான முழுமையான பொருளாதார மூலோபாய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

கல்வித்துறையில் மறுசீரமைப்புக்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனித வள சந்தையில் ஆற்றலை மேம்படுத்துவதற்காக தனியார் துறையும் உள்வாங்கப்பட்டுள்ளது. பொதுபோக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்காக இதனடிப் படையில் மற்றுமொரு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முறைசாரா தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் ஓய்வூதிய கொடுப்பனவு முறையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கக்கூடிய வேலைத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில், மேல் மாகாணத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு தேவையான யோசனைகள் அடுத்த வரவு- செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேசிய புத்தாக்க நிலையம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு

(கொழும்பு)

தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் மற்றும் மலேசியாவின் லிம்கொக்விங் பல்கலைக்கழகமும் இணைந்து கிருளப்பனை பிரதேசத்தில் நிர்மாணித்துள்ள தேசிய புத்தாக்க நிலையம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நவீன தொழில்நுட்பம், புத்தாக்கம், ஆக்கத்திறனுடன் எதிர்கால தலைமுறையின் தொழிற்றிறன்களை மேம்படுத்தும் நோக்குடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைத்த தோடு மாண வர்களின் பாவனைக்கு வழங்கினார்.

இந் நிகழ்வை நினைவு கூரும் வகையில் மலேசியாவின் லிம்கொக்விங் பல்கலைக்கழகத்தின் உப தலைவர் Dato Tiffanee Marie Lim மற்றும் தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டீ.எம்.ஏ. குலசிறி யால் ஜனாதிபதிக்கு விசேட நினைவுச் சின்னமொன்று வழங்கி வைக்கப்பட்டது.

அமைச்சர் சந்திம வீரக்கொடி, பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான, திறன் விருத்தி, தொழிற் பயிற்சி அமைச்சின் செயலாளர் பீ.ரணேபுர, இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் Won Zaidi Wan



Abdullah, தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் சுதர்மா கருணாரத்ன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண் டனர். (இ-7)



# இம்முறை அமோகம்

# 70,000 லீற்றர் பனம் களி இதுவரை பெறப்பட்டது

## முகாமையாளர் கோபாலகிருஸ்ணன் தகவல்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையால் இம்முறை சேகரிக்கப்பட்டு வரும் பனம் பழத்தில் இருந்து இதுவரை 70 ஆயிரம் லீற்றர் பனம் களி பெறப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபை விரிவாக்கல் முகாமையாளர் கே. கோபாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். பொதுமக்களின் ஆர்வத்தினால் மாத்திரமே கடந்த வருடத்தை விட இம்முறை பனம் களியின் அளவு பன்மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பனை சார்ந்த உணவு உற்பத்தியை அதிகரித்து சந்தை வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கில் பனை அபிருத்தி சபையால் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பனம் பழம் பழுக்கும் பருவ காலத்தை முன்னிட்டு பனம் பழங்களை சேகரித்து அதன் மூலம் பனம் களி பெறப்படும் [illegible] ஆரம்பித்தோம். அத்திட்டத்தின் ஆரம்பத்தில் ஒரு பனம் பழம் 5 ரூபாய் வீதம் பொது மக்களிடம் இருந்து பெறப்பட்டது. மாதர் சங்கங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள் ஊடாக பனம் பழங்களை கொள்வனவு செய்திருந்தோம்.

சில கிராமங்களில் குழுக்கள் அமைத்து அவர்களுக்கு பனம் களி பெறப்படுவது தொடர்பில் ஒருநாள் பயிற்சி வழங்கப்பட்டது. அத்துடன் அதற்கான கருவிகளும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அதன் ஊடாக அவர் கள் அந்தந்தக் கிராமங்களில் பனம் பழங்களை கொள்வனவு செய்து பனம் களி தயார் செய்திருந்தார்கள். அவர்களிடம் இருந்து ஒரு லீற்றர் களி 90 ரூபாய் வீதம் கொள்வனவு செய்திருந்தோம்.

மேலும் சில பிரதேசங்களுக்கு எமது உத்தியோகத்தர்கள், பனம் களி பெறப்படும் கருவிகளுடன் சென்று பொதுமக்களிடம் பனம் பழத்தினை கொள்வனவு செய்து அப்பகுதியில் இருந்தே களியை பெற்றுக்கொண்டனர்.

கடந்த வருடம் வடபகுதியில் இருந்து 30 ஆயிரம் லீற்றர் பனம் களி தான் பெறப்பட்டது. இம்முறை 70 ஆயிரம் லீற்றர் பனம் களி பெறப்பட்டுள்ளது. தற்போதும் கொள்வனவு நடவடிக்கை இடம் பெற்று வருகிறது. இம்முறை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதுடன், பனம் உற்பத்தியை அதி கரிப்பதில் ஆர்வத்துடனும் உள்ளார்கள். மேலும் பனம் பொருட்களுக்கு வெளி நாட்டில் கேள்வியும் அதிகரித்துள்ளது. எனவே பனம் களி சேகரிக்கும் செயற்றிட்டம் முடிந்தவுடன் பனம் களி மூலம் உணவுப்பொருட்களை உற் பத்தி செய்யும் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம்.

அத்துடன் பனம் விதைகளும் இம்முறை பொதுமக்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த வகையில் இதுவரை 5 இலட்சத்துக்கு மேற்பட்ட பனை விதைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மட்டுமே எதிர்காலத்தில் பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

சிறப்பான பிரஜை நாட்டுக்குப் பங்களிப்பு செய்வதற்காக தேவையான கல்விக்கான அடிப்படை எதிர்வரும் மூன்று தசாப்த காலத்தில் பாடசாலைகளில் உருவாக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வில் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை அலரிமாளிகையில் இடம்பெற்றது. தற்போது நாட்டில் ஆசிரியர் தொகையில் 60 சதவீதமானோர் டிப்ளோமா அல்லது பட்டப் படிப்பு தகுதி இன்றி கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரையில் பயிற்சிகள் பெறாதா அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே பாடசாலைக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார். 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையை இந்துமா சமுத்திர பிராந்தியத்தின் கல்விக்கேந்திர நிலையமாக தரமுயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

கல்வித்துறை மேம்பாட்டுக்கான தேவையான நிதி ஒதுக்கப்பட்டு இதனை சிறப்பான சேவையாக தரமு யர்த்தப் படும். கல்வித் துறை யில் உயர்வளர்ச்சியை பெற்றுள்ள நாடுகளின் அனுபவங்கள்,எடுத்துக்காட்டுக்கள் இதற்காக பெற்றுக் கொள்ளப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார். .

நாட்டிலுள்ள 19 கல்விக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த 3336 பேருக்கு இதன் போது பிரதமர் நியமனக் கடிதங்களை வழங்கினார். இதில் 1078பேர் தமிழ் மொழி ஆசிரியர்கள் ஆவர். இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், இராஜாங்க அமைச்சர் வி. [illegible] கலந்துகொண்டனர்.(இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹசன் அலி, சடாப், வஸீம் ஜொலிப்பு

# பாகிஸ்தான் மீண்டும் வெற்றி



அபுதாபி போட்டியின் ஹீரோ ஹசன் அலியின வேகமும் சடாப் கான், இமாட் வஸீமின் சுழல் பந்துவீச்சும் கைகொடுக்க, 4ஆவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 66 பந்துகள் மீதமிருக்கையில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றி பெற்றது.

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி சார்ஜாவில் நேற்று நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு அணித் தலைவர் உபுல் தரங்க (0) மோசமான ஆரம்பம் கொடுத்தார். நிரோஷன் டிக்வெல (22), டினேஷ் சண்டிமல் (16), சதீர சமரவிக்ரம (0), மிலிண்ட சிறிவர்தன (13), சீகுகே பிரசன்ன (5), திசார பெரேரா (0), அகில தனஞ்செய (18) ஏமாற்றினர். பொறுப்பாக ஆடிய லகிரு திரிமன்னே (62) அரைசதம் கடந்து ஆறுதல் தந்தார். சுரங்க லக்மல் (23*) ஓரளவு கைகொடுக்க, இலங்கை அணி 43.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் ஹசன் அலி 37 ஓட்டங்களுக்கு 3, இமாட் வஸீம், சடாப் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

### பாபர் அரை சதம்

சுலப இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு இமாம் உல் ஹக் (2), பகார் ஷமான் (17) சுமாரான ஆரம்பம் கொடுத்தனர். மொஹமட் ஹபீஸ் (9) ஏமாற்றினார். அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி அரை சதம் கடந்த பாபர் அஸம் (69*), சோயப் மலிக் (69*), இணைந்து வெற்றிக்கு வித்திட்டனர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 39 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (177) 7 விக்கெட்டுக்களால் அடைந்தது.

இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணி 4-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் பாபர் அஸம் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 5 ஆவது ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் 23ஆம் திகதி சார்ஜாவில் நடக்கிறது.

## ஒரு வருட ஓய்வுக்கு பிறகு

# மீண்டு (ம்) வரும் ஸ்ரெயின்




தோள்பட்டை காயம் காரணமாக ஒரு வருடமாக விளையாடாமல் இருக்கும் ஸ்ரெயின் அடுத்த மாதம் களம் இறங்க திட்டமிட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரெயின் பெரும்பாலும் காயத்தால் அவதியுற்றது கிடையாது. அதற்கேற்றவாறு தனது உடல்நிலையை கட்டுக்கோப்பாக வைத்திருந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தென்னாபிரிக்கா அணி அவுஸ்திரேலியா சென்று விளையாடியது. அப்போது ஸ்ரெயின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதற்காக அவர் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். அதன பின் கடந்த ஒரு வருடமாக தென்னாபிரிக்கா அணியில் இடம்பிடிக்காமல் இருந்தார்.

சமீபத்தில் நடைபெற்ற பங்காளதேஷுக்கு எதிரான தொடருக்கான பயிற்சி முகாமில் கலந்து கொண்டார். தற்போது அவரது உடல் நிலை நன்கு தேறிவிட்டது. இதனால் அடுத்த மாதத்தில் இருந்து களம் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை சார்பில் குளோபல் லீக் ரி20 கிரிக்கெட் தொடர் நடைபெற இருந்தது. தற்போது இந்த தொடர் தள்ளிப் போயுள்ளது. இது ஸ்ரெயின் களம் இறங்க நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

மீண்டும் அணிக்கு திரும்புவது குறித்து ஸ்ரெயின் கூறுகையில் "மீண்டும் அணிக்கு திரும்புவது மிக விரைவில் நடக்கும். கடந்த திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமை சிறப்பாக பந்து வீசினேன். நாளுக்கு நாள் வேகத்தை அதிகரித்தேன். புதன்கிழமை 26 பந்துகள் வீசிய நான், வெள்ளிக்கிழமை 30 பந்துகள் வீசினேன்.


தற்போதைய நிலையில் நான் 70 முதல் 80 சதவீதம் வரை ரன்அப் சிறப்பாக அமைந்துள்ளது.

அடுத்த வாரம் திங்கள், செவ் வாய், புதன், வியாழன், வெள்ளி என பந்து வீசுவேன். ஒவ்வொரு வாரமும் பந்துவீசும் சதவீதத்தை அதிகரித்து ரி20 கிரிக்கெட் போட்டிக்கு திரும்பும்போது, நான் முழு ரன் அப், முழு வேகத்துடன்பந்து வீசுவேன்" என்றார்.

இதனால் விரைவில் ஸ்ரெயின் வேகப் பந்துவீச்சை ரசிகர்கள் பார்க்கலாம்.

## பிரிஸ்பேன் ஹீட்டுக்காக

# 5 வருட ஒப்பந்தம்



அவுஸ்திரேலிய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் லின்னை 5 வருடத்திற்கு தலா ஒரு மில்லியன் டொலருக்கு ஒப்பந்தம் செய்துள்ளது பிரிஸ்பேன் ஹீட்.

இந்திய கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் ஐ.பி.எல். தொடரை அடிப்படையாகக் கொண்டு அவுஸ்திரேலியாவில் பிக்பாஷ் ரி20 கிரிக்கெட் லீக் தொடர் நடைபெற்று வருகிறது.

2017-18 பருவகாலத்துக்கு அனைத்து அணிகளும் தயாராகி வருகின்றன. தேவையில்லாத வீரர்களை நீக்கியும் தேவைப்படும் வீரர்களை ஒப்பந்தம் செய்யும் வேலையிலும் அணிகள் களம் இறங்கியுள்ளன.

அவுஸ்திரேலிய அணியின் அதிரடி வீரர் கிறிஸ் லின். இவரை 2021-22ஆம் ஆண்டு சீசன் வரை ஐந்து ஆண்டுகளுக்கு பிரிஸ்பேன் ஹீட் அணி ஒப்பந்தம் செய்துள்ளது. கிறிஸ் லின்னுக்கு அந்த அணி வருடத்திற்கு தலா ஒரு மில்லியன் டொலர் சம்பளமாக கொடுக்கிறது.

பிக் பாஷ் லீக் தொடரில் ஒரு வீரர் அதிகமாக வாங்கும் சம்பளம் இதுவே. இதன் மூலம் அதிக சம்பளத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட வீரர் என்ற பெருமையை கிறிஸ் லின் பெற்றுள்ளார். கிறிஸ் லின் கடந்த 2011ஆம் ஆண்டில் இருந்தே பிரிஸ்பேன் ஹீட் அணிக்காக விளையாடி வருகிறார். இவர் ஐ.பி.எல். போட்டிகளில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

## ஐ.சி.சி ஒரு நாள் தரவரிசை

# துடுப்பாட்டத்தில் டி வில்லியர்ஸ் பந்துவீச்சில் ஹசன் அலி முதலிடம்




ஐ.சி.சியின் ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான தரவரிசையில் விராட் ஹோலியை பின்னுக்குத் தள்ளி டி வில்லியர்ஸ் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிராக பார்லில் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ் 104 பந்துகளில் 176 ஓட்டங்கள் குவித்தார்.

இதன்மூலம் ஐ.சி.சி. ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதல் இடத்திற்கு முன்னேறினார். முதல் இடத்தில் இருந்து வந்த விராட் ஹோலி 2ஆவது இடத்திற்கு சரிந்துள்ளார். 2ஆவது போட்டிக்கு முன் டி வில்லியர்ஸ் 3ஆவது இடத்தில் இருந்தார். தற்போது 879 புள்ளிகளுடன் முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

விராட் ஹோலி 877 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். வோர்னர் 865 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளார்.

பாகிஸ்தான் இளம் வீரர் பாபர் அசம் 833 புள்ளிகளுடன் 2 இடங்கள் முன்னேறி [illegible] இடத்தை பிடித்துள்ளார். குயின்ரன் டி ஹொக், ஜோ ரூட் ஆகியோர் 5ஆவது இடத்தையும் ரோகித் சர்மா 7ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் பாகிஸ்தான் இளம் வேகப்பந்து வீச்சாளர் ஹசன் அலி முதல் இடத்தை பிடித்துள்ளார். இலங்கைக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தினார். இதன்மூலம் 6 இடங்கள் முன்னேறி 743 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார்.

இம்ரான் தாஹிர், ஹசில்வுட், ரபாடா, மிட்செல் ஸ்ராக், பும்ரா, ட்ரென்ட் போல்ட், அக்சர் பட்டேல், ரஷிட் கான், சுனில் நரைன் ஆகியோர் முறையே 2ஆம் இடத்திலிருந்து 10ஆம் இடம்வரை உள்ளனர்.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் பாகிஸ்தான் வீரர் ஹபீஸ் 360 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். சஹிப் அல் ஹசன் 345 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளார். ஆப்கானிஸ்தான் வீரர் நபி 3ஆவது இடத்தையும் இலங்கை வீரர் மத்யூஸ் 4ஆவது இடத்தையும் பென் ஸ்ரோக்ஸ் ஐந்தாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மருதங்கேணி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொண்டார்.

(படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



21.09.2017 அன்று சிவபதம் அடைந்த எமது குலவிளக்கு

அமரர் திருமதி.

## குருசாமி சிவபாக்கியம்

அவர்களது இறைபதமடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு,

அன்னாரின் இல்லத்தில் 21.10.2017 இன்று சனிக்கிழமை 11.30 மணியளவில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

உதயசூரியன் வீதி,
உடுவில் சுன்னாகம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## இராசி பலன்

21.10.2017
ஐப்பசி 04, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
துதியை பின்னிரவு 2.43 மணிவரை
சுவாதி முற்பகல் 10.59 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சர்வதேச விவசாய தினம்
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி , ரேவதி | | ராகு |
| கேது | | | |
| | சனி | குரு,சூரி<br>புத,சந் | செவ்<br>சுக் |

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

**மேடம்:** கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், உடல் நலன் சீராகும், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம்.

**இடபம்:** தொழில் வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும்.

**சிம்மம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், உறவு-பகை பாராமல் உதவுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்:** திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறலாம், கொள்கைக் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**கன்னி:** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கொக்குவில் ஸ்ரீஞானபண்டிதா வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் பாடசாலை கலையரங்கில் அதிபர் எஸ்.கந்தவனச்செல்வன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டார்.

## ஏழாலை மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஏழாலைமகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் வே. உதய மோகன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர்.சி.சிறிதரன் கலந்து கொள்வார். (இ-10-105)

## பசு வதையைத் தடுக்கும் செயற்றிட்டம் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

பசுவதையைத் தடுக்கும் நோக்குடன் கட்டாக்காலி மாடுகள் கொள்வனவு செய்யப்பட்டு பயனாளிகளிடம் வழங்கும் ஆரம்ப கட்ட நிகழ்வு நேற்று முன்தினம் 19 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் இல. 364 நாவலர் வீதியில் அமைந்துள்ள தற்காலிக பராமரிப்பு காப்பகத்தில் நடைபெற்றது.

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தில் வேலணை பிரதேச செயலர் ஊடாக மானிய விலையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 35 மாடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (இ-9)

## கடந்தகால படிப்பினைகளை அனுபவமாகக்கொண்டு எதிர்காலத்தை சுபீட்சமானதாக கட்டியெழுப்புவோம்

# டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

விளையாட்டின் மூலமே சமூகத்தின் ஒற்றுமையை பலப்படுத்த முடியும் என்பதுடன் இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள் தொடர வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் வருடாந்த விளையாட்டு நிகழ்வு ஆகியவற்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கிடை க்கப்பெற்ற அரிய பல வாய்ப்புக்களை கடந்தகால தவறான தமிழ் அரசியல் தலைமைகள் உரிய முறைப்படி முன்னெடுக்காததால் மக்களுக்கான தேவைகள் பல உரியமுறையில் இது வரையில் பூர்த்திசெய்யப்படாத நிலைமையே காணப்படுகின்றது.

இதன்காரணமாக தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களிலேயே பின்தள்ளப்பட்டுள்ள நிலையில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். மக்களை உசுப்பேற்றி, உணர்ச்சியூட்டி வாக்குகளை அபகரிக்கும் சுயலாப தமிழ் அரசியல் வாதிகளே மக்களது வாழ்வியல் பின்னடைவுகளுக்கு காரணகர்த்தாக்களாக உள்ளனர்.

இருந்தபோதிலும் குறைந்த அரசியல் பலத்தோடு இருக்கும் நாம் கிடைத்த வாய்ப்புக்களினூடாக மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களையும் பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுத்து சாதித்துக்காட்டியுள்ளோம்.



ஆனால் மக்களின் வாக்குகளை அபகரித்து மாகாண சபையையும் நாடாளுமன்ற கதிரைகளையும் அபகரித்துக் கொண்டவர்களால் எமது மக்கள் தொடர்ச்சியாகவே ஏமாற்றப்பட்டு வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டிய டக்ளஸ் தேவானந்தா கடந்த கால படிப்பினைகளை தமது அனுபவங்களாகக் கொண்டு எதிர்காலத்தில் சரியான அரசியல் தலைமைகளை தெரிவுசெய்யவேண்டும். இதனூடாகவே விளையாட்டுத்துறை மட்டுமல்லாது கல்வித்துறை உள்ளிட்ட துறைகளில் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டி மேம்பட்டை காணமுடியும் என தெரிவித்தார். (இ-7)

## தரம்- 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வெகுமதிக்காக விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

2017 இல் நடைபெற்றதரம்-5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகள் 9000 பேருக்கு ஒவ்வொருவருக்கும் பெறுமதியான வெகுமதிகள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையால் வழங்கப்படவுள்ளது.

இவ்வெகுமதிக்கான விண்ணப்பங்களை www.etfb.lk என்ற இணையத்தளத்தின் மூலமும் முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியைக் கொண்ட 9X4 அளவுடைய தபால் உறையை இல. 70, மார்டின் வீதி, யாழ்ப்பாணம் என்ற அலுவலக முகவரிக்கு 2017.11.17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலமும் 2017.10.23 ஆம் திகதியிலிருந்து அலுவலக நேரங்களில் மேலே குறிப்பிடப்பட்ட அலுவலகத்திற்கு நேரடியாக வருவதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை புலமைப் பரிசில் அலுவலர், புலமைப் பரிசில்கள் பிரிவு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, இல. 92, கிருள வீதி, நாரஹேன்பிட்டி கொழும்பு-05 என்ற முகவரிக்கு 2017.11.[illegible] ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அல்லது நேரில் கையளிக்க முடியும்.

பூரணப் படுத்தப்படாத விண்ணப்பங்களும் முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (இ-7)

# கடலில் பல நாட்கள் நின்று மீன்பிடிக்க யாழ்.மாவட்ட மீனவர்கள் தயக்கம்

## துறைசார் அதிகாரி றமேஸ்கண்ணா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள மீனவர்கள் பல நாட்கள் கடலில் நின்று மீன் பிடிப்பதற்கு தயக்கம் காட்டுகின்றனர் என் யாழ். கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரி கே.றமேஸ்கண்ணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிப்பதன் மூலம் தான் எமது மாவட்ட மீன் உற்பத்தியை அதிகரிக்க முடியும். அதன் அடிப்படையில் ஆழ் கடல் மீன்பிடிக்கான படகுகள் (பலநாள் கலன்) எமது மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 89 படகுகள் (பலநாள் கலன்) உள்ளன. அதில் 6 படகுகள் புதியவை, ஏனையவை தென்பகுதியில் இருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளப்பட்டவை. அவை ஆழ்கடலுக்கு மிகவும் பொருத்தப்பாடுடையவை அல்ல. குறிப்பிட்ட எல்லைக்குள் தான் போக முடியும். தற்போதுள்ள பல நாள் கலன்களில் மீன் பிடிக்குச் சென்றால் 7 தொடக்கம் 15 நாட்கள் மட்டுமே கடலில் நிற்க முடியும். தரமான படகு என்றால் ஒரு மாதம் வரை கடலில் நிற்கமுடியும்.


மேலும் இந்த பலநாள் கலன்களை கட்டுவதற்குரிய இறங்குதுறைகள் எமது மாவட்டத்தில் இன்னும் புனரமைக்கப்படவில்லை. அத்துடன் படகை செலுத்துவதற்கு உரிய படகோட்டிகள் இல்லை. தற்போதுதான் யாழ்.சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தில் 25 பேருக்கு படகு ஓட்டுவதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பயிற்சி அளிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

எமது மாவட்ட மீனவர்கள் ஒரு நாளில் மீன்பிடித்து விட்டு கரை திரும்புகிறார்கள்.தற்போது இதை வளக்கமாகவும் கொண்டுள்ளார்கள். பலநாட்கள் கடலில் நின்று மீன்பிடிப்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். அது மீன்பிடி அபிவிருத்திக்கு தடையாக இருக்கும். பல நாட்கள் நின்று மீன்பிடிப்பதை பழக்கப்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (இ-9)

## 'ஒருத்தி' இன்று திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுநூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் ஒக்டோபர் மாதத் திரைப்படமாக இ.ராஜராயணனின் 'கிடை' குறுநாவலை அடிப்படையாகக் கொண்ட 'ஒருத்தி' திரைப்படம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் திரையிடப்படும். (இ-10-51)



கோப்பாய் மத்தி கிராம அலுவலகமும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக மாற்றுத்திறன் அலகும் இணைந்து மேற்கொள்ளும் தூய்மையான கோப்பாய் மத்தி 15 ஆம் கட்ட நிகழ்வும் சிரமதானமும் (கிராமம் அழகுறும் நிகழ்ச்சித் திட்டம்) அண்மையில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: செவ் 2இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: BBA/ சொந்த தொழில்
தொ.இ: B/7106

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 48
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:Civil Eng, QS அரச தொழில்
தொ.இ: B/7108

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 39 செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில் :BBA/உதவி முகாமையாளர்
தொ.இ: B/7112

பிறப்பு: 1972இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 154cm
தகைமை/தொழில்:BA/ ஆசிரியர்
தொ.இ: B/7115

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம் 5'2"
தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7195

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 16 செவ் 2இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/7197

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 43 செவ் 12இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7199

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/7200

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




கேலிச்சித்திரம்

# இந்திய மீனவர்கள் 267 பேர் இந்த வருடம் யாழில் கைது!

## நீரியல்வளத் திணைக்களம் தகவல்

(யாழ்ப்பாணம்)

அத்துமீறி நுழைந்து யாழ் மாவட்டத்துக்குட்பட்ட கடற்பரப்புகளில் மீன்பிடியில் ஈடுபட்டதாக இந்த வருடம் 267 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரி றமேஸ் கண்ணா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தின் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும் மீன் வளத்தை பாதுகாக்கும் வகையிலும் சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சட்ட நடவடிக்கைகளை கடுமையாக்கி அதிகரித்துள்ளோம்.

அந்தவகையில் இந்த வருடம் இந்திய மீனவர்களுடைய 52 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

267 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அதில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் 225 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 42 இந்திய மீனவர்கள் தற்போது யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை உள்ளூர் மீனவர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்துள்ளோம். இவ்வருடம் இதுவரை 34 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 69 மீனவர்கள் தண்டனை பெற்றுள்ளார்கள். அவர்களிடம் இருந்து 3 லட்சத்து 2 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. இந்த சட்ட நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




திருவருள்மிகு

# இணுவில் கந்தசுவாமி கோவில்

## சத்துரு சங்ஹார திரிசதி ஹோமமும்

## கந்தசஷ்டி பெருந்திருவிழா விஞ்ஞாபனமும்

முருகன் அடியார்களே!

நிகழும் ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 3ஆம் நாள் வெள்ளிக்கிழமை (20.10.2017) தொடக்கம் (25.10.2017) புதன்கிழமை வரை அதிகாலை 4.00 மணி தொடக்கம் காலை 7.15 மணி வரையும் மாலை 2.00 மணி தொடக்கம் 4.15 மணி வரையும் சண்முகார்ச்சனையும் தொடர்ந்து சத்துரு சங்ஹார திரிசதி ஹோமமும் நடைபெற இணுவை சண்முகப் பெருமான் திருவருள் கைகூடியுள்ளது. கந்தசஷ்டி பெருந்திருவிழாவிலும் பங்குகொண்டு எம் பெருமானுடைய திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

**தினமும்**

அதிகாலை 4.00 மணி திருப்பள்ளிப் பூசையைத் தொடர்ந்து பிரகார பூசை, 4.45 மணி வசந்த மண்டபப் பூசை, 5.00 மணி சண்முகார்ச்சனையைத் தொடர்ந்து ஹோமம், பூர்ணாகுதி
காலை 7.30 மணி பூசை,
8.30 மணி சண்முகார்ச்சனை, 9.30 மணி தினமும் 108 வலம்புரி சங்காபிஷேகம், 11.00 மணி பூசை, 11.30 வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சண்முகார்ச்சனை.
மாலை 2.00 மணி சாயரட்டைப் பூசை, 2.30 மணி வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சண்முகார்ச்சனை ஹோமம், பூர்ணாகுதி
4.30 மணி கந்தபுராண படிப்பு, 5.00 மணி இசை ஆராதனை,6.00 மணி இரண்டாம் காலப் பூசை, 6.30 மணி வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சண்முகார்ச்சனை அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா.

22.10.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி தண்டாயுதபாணி விசேட அபிஷேகம்
25.10.2017 புதன்கிழமை மாலை 4.00 மணி சூரசங்காரம் இரவு பிராயச்சித்த அபிஷேகம் அதனைத் தொடர்ந்து சண்முகார்ச்சனை
26.10.2017 வியாழக்கிழமை காலை 4.00 மணி அபிஷேகம் பூசை, காலை 5.00 மணி வசந்த மண்டபப் பூசை, காலை 6.00 மணி ஸ்கந்தபுட்கரணி தீர்த்தம், காலை 10.00 மணி அபிஷேகம், பூசையைத் தொடர்ந்து சண்முகார்ச்சனை, மாலை 6.00 மணி திருக்கல்யாணம்.

**27.10.2017 வெள்ளிக்கிழமை**
**ஆறுபடை மூர்த்திகள் அலங்காரப் பவனி**
**காலை 8.00 மணி விசேட அபிஷேகம்**
**மாலை 6.30 மணி வசந்த மண்டப பூசை நடைபெற்று ஆறுபடை மூர்த்திகளின் வீதி தரிசனம்**

**கந்தசஷ்டி நாட்களில் ஆறுகாலப் பூசையின் போதும் சண்முகார்ச்சனை நடைபெறும்.**

**குறிப்பு: ஹோமத்தில் பூர்ணாகுதி செய்ய விரும்பும் அடியார்கள் அலுவலகத்தில் முன்கூட்டியே பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.**

இங்ஙனம்,
தர்மகர்த்தா சபை, இணுவில் கந்தசுவாமி கோவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களின் இழப்புக்கள் ஒருபோதும் வீணாகாது

## சிவமோகன் எம்.பி.தெரிவிப்பு

சிங்கள தேசம் எமது சமாதான கரங்களை எட்டி உதைக்குமேயானால் நிச்சயமாக நாம் மீண்டெழுந்து மீண்டும் நாம் தனியாக நிற்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்படுவோம் என்பது நிதர்சனம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழகம் அண்மையில் நடத்திய மின்னொளியிலான உதைபந்தாட்ட போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர்,

முள்ளிவாய்க்கால் பேரவலத்திலிருந்து நாம் மீண்டெழுவோமா என்று நாமே சந்தேகப்பட்ட காலம் இருந்தது. ஆனால் இன்றோ எமது இனம் அதிலிருந்து மீண்டெழுந்திருக்கின்றது. இன்னும் மீண்டு எழும் என்று நான் நம்புகின்றேன். ஒரு புறம் சமாதானமான சூழலில்





நாம் வாழ்வதற்காக அரசியல் யாப்பு மாற்றம் தயார் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

அதிலே எமக்குத் தேவையான காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம், எமக்கான வடகிழக்கு இணைந்த எமது பூர்வீக பிரதேசம் இவை அனைத்தும் ஒன்றிணைத்து எமக்கு தீர்வாக கிடைக்குமா? இல்லையா? என்ற ஒரு இக்கட்டான நிலையில் இன்று நாம் இருந்து கொண்டிருக்கின்றோம். நிச்சயமாக நாம் மீண்டெழுந்து மீண்டும் நாம் தனியாக நிற்க வேண்டிய சூழலுக்கு நாம் தள்ளப்படுவோம்என்பது நிதர்சனம்.

எந்தவொரு இனமும்தன்னை தக்க வைத்துக்கொள்வதற்காக எதிர்த்து நிற்கும். அதே போல் எமது இனமும் அடக்கப்பட்டது. அந்த அடக்குமுறைக்கு எதிராக பாரிய யுத்தங்களை புரிந்து எமது மாவீரர்கள் தங்களது இன்னுயிர்களை ஈந்து இன்று தமிழர்களுக்கான விடுதலையை தமிழர்கள் ஒரு விடுதலையை வேண்டி நிற்கும் இனமாக உலகத்துக்கு அடையாளம் காட்டி நிற்கிறார்கள். அடையாளம் காட்டி சென்றிருக்கிறார்கள். எனவே அவர்களின் இழப்புகள்ஒருநாளும்வீண்போகாது என திண்ணமாக நம்புகின்றேன்என தெரிவித்தார்(2-281)

# வடக்கு மாகாண விவசாய அமைச்சின் உப-அலுவலகம் மாங்குளத்தில் திறப்பு





வடக்கு மாகாணத்தின் விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சினுடைய உப அலுவலகம் நேற்றுக் காலை 9 மணியளவில் மாங்குளத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக மாங்குளம் இத்தியடி சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து படங்கள் எடுத்து வரப்பட்டு சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள் நடைபெற்று தொடர்ந்து வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரனினால் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது.

இதன்போது கலந்து கொண்ட பலரும் நீண்ட நாளாக வடக்கு மாகான சபைக்கான அலுவலகங்கள் மாங்குளத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு முன்னுதாரணமான செயற்பாடு என தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சர் க. சிவநேசன், வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், தியாகராசா, நடராஜா, இந்திரராசா, சிவயோகன், தர்மலிங்கம், தவநாதன், ஜெயதிலக மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயூரன் மற்றும் திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.(2-281)

# கசிப்பு உற்பத்தி, விற்பனை; குற்றச் செயல்கள் அதிகரிப்பு

கிளிநொச்சி அக்கராயன் சுபாஸ்குடியிருப்பு, கொங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனை தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு விற்பனை உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதுடன் பல்வேறு குற்றச் செயல்களும் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் இப்பகுதியில் இருந்த கசிப்பு உற்பத்தி விற்பனை கடந்த காலங்களில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டபோதும் மீளவும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரித்துள்ளது என்றும் இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# மலேரியாவை காவும் புதிய வகை நுளம்பு; கிளிநொச்சி கிணற்றில் கண்டுபிடிக்கப்பட்டது



(பரந்தன்)

வடக்கில் மன்னார், வவுனியா,யாழ்ப்பாணம்ஆகியமாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மலேரியாவை காவும் புதிய நுளம்பு வகை கிளிநொச்சியிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்பு இயக்கத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி ம. ஜெயராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி திருநகர் வடக்கு பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் இவ் வகை புதிய நுளம்பு அண்மையில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்பு இயக்கத்தின் பூச்சியியல் ஆய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட ஆய்வு நடவடிக்கையின் போதே இவ் வகை புதிய மலேரியா காவி நுளம்பு கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. குறித்த மலேரியா காவி நுளம்பு அனாஅக்பிலிஸ்டிபென்சி என்ற புதிய நுளம்பே கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த நுளம்பு வகை கண்டுபிடிப்பானது மலேரியா நோயின் மீள் வருகை அல்ல எனவும் ஆனால் இப்புதிய நுளம்புகள் மலேரியா ஒட்டுண்ணிகளைக் காவிச் செல்லக் கூடியது என்றும் தெரிவித்த ம. ஜெயராசா, பொதுமக்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் அருகில் உள்ள அரச வைத்திசாலைக்குச் சென்று மலேரியா இரத்த பரிசோதனை செய்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

குறிப்பாக மலேரியா நோய் இன்றும் காணப்படுகின்ற இந்தியா உள்ளிட்ட தென்னாசிய நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்குச்சென்று வருபவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் அவசியம் மலேரியா இரத்த பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொதுமக்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நோய்த் தாக்கங்களை கட்டுப்படுத்த தாங்கள் செய்ய வேண்டிய முக்கிய பணிகளான தங்களுடைய சுற்றுப்புறச் சூழலை நுளம்புகள் பெருக்கம் ஏற்படாத வகையில் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய மலேரியா நோய்க் காவி நுளம்புகள் கண்டுப்பிடிக்கப்பட்ட இடங்களிலும், சுற்றயல்பிரதேசங்களிலும் நுளம்புகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என கிளிநொச்சி பிராந்திய பதில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளருமான வைத்தியர் சி. மைதிலி குறிப்பிட்டுள்ளார். (2-312)

# குஞ்சுக்குளம் கிராமத்தினுள் உவர்நீர் உட்புகுந்தமையால் மக்கள் இடம்பெயர்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட குஞ்சுக்குளம் கிராம நிலம் உவராக மாறி வருவதால் இங்கு வசிக்கின்ற மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

பூநகரியை அண்மித்த பகுதியில் காணப்படும் மேற்படி குஞ்சுக்குளம் விவசாயக் கிராமமாக காணப்பட்டதுடன், சுமார் 1500 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களும் 12 வரையான சிறுசிறுகுளங்களும் காணப்பட்டதாகவும் கடந்த கால யுத்தம் காரணமாக உவர் நீர் தடுப்பணைகள் சேதமடைந்து பூநகரி பாலாவி போன்ற பகுதியில் கடல் பெருக்கெடுக்கும் போது கடல் நீர் மண்டைக்கல்லாறு வழியாக உவர் நீர் உட்புகுந்து சுமார் 900ஏக்கர் வரையானவிளைநிலங்கள்முழுமையாக உவரடைந்துள்ளன.

ஏனைய நிலங்களும் உவர் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், நன்னீராக காணப்பட்ட சகல கிணறுகளும் உவராக மாறியுள்ளன.

இதனால் இப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் முழுமையாக இடம் பெயர்ந்து சென்றுள்ளதுடன், இப்பகுதியில் நூற்றாண்டு பழைமை வாய்ந்த குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலை முன்பள்ளி என்பனவும் செயலிழந்துள்ளன.

தற்போது மூன்று வரையான குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்ற நிலையில் காட்டு யானைகளின் தொல்லை, குடிநீர் இன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் இப்பகுதியில் தங்கியுள்ள மேற்படி குடும்பங்கள் தெரிவித்துள்ளன. (2-315)

## ஜனாதிபதி வருகையையொட்டி

# கல்லூரிக்கு 5 நாட்களில் 3 மில்லியன் ரூபா செலவு

(குருமன்காடு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வருகையை முன்னிட்டு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு 3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் நடமாடும் சேவைக்காக வரவுள்ள நிலையில், அந்த பாடசாலையின் உட்கட்டமைப்பு பணிகளுக்காக கடந்த 5 நாட்களில் குறித்த நிதி செலவிடப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு வர்ணம் பூசுதல், மைதானம் புனரமைத்தல், வீதி அமைத்தல், மின் இணைப்புகள் அற்ற பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்கல், மலசல கூடம் அமைத்தல், புனரமைத்தல், மின்குமிழ்கள் பொருத்தல், பூச்சாடிகள் அமைத்தல், குளிரூட்டி பொருத்தல், கமராக்கள் பொருத்தல் போன்ற பணிகளுக்காக கடந்த 5 தினங்களுக்குள் 3 மில்லியன் ரூபாவை மத்திய அரசாங்கம் செலவிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (2-250)





வவுனியா மகா விஷ்ணு ஆலயத்தில் நரகாசூரன் போர் தீபாவளி[illegible]லான பக்தர்கள் புடைசூழ சிறப்பாக நடைபெற்றதைப் படங்களில் காண[illegible] (படங்கள் - [illegible] செய்தியாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 60 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும்

# கிளிநொச்சி பிரதான பேருந்து நிலையத்தின் ஒப்பந்த விடயங்கள் காட்சிப்படுத்தப்படவில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி நகருக்கான பிரதான பேருந்து நிலையம் அறுபது மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றபோதும் உரிய முறையில் அமைக்கப்பட வில்லை எனப் பலரும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.



கிளிநொச்சி நகருக்கான பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படாமையினால் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை போக்கு வரத்துச்சபை பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் பய ணிகள் சேவைகளை முன் னெடுப்பதில் பெரும் சிர மங்களை எதிர்கொண்டு வந்தன.

குறிப்பாக 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளி நொச்சி காக்கா கடைச் சந்தி யிலும் அதன் பின்னர் டிப் போச் சந்தியின் டிப்போவிற்கு முன்பாகவும் அதன் பின்னர் தற்போது பேருந்து நிலையம் அமையும் இடம் ஆகிய வற்றில் வைத்து பேருந்து சேவைகள் மேற்கொள்ளப் பட்டு வந்தன.

இவ்வாறு சேவைகள்மேற் கொள்ளப்பட்டு வந்தபோதும் பயணிகள் தங்குவதற்கான கூடாரங்கள், மலசலகூட வசதிகள் எவையும் கடந்த ஏழு ஆண்டுகளாக எந்த இடத்திலும் அமையப் பெற வில்லை. இதனால் பயணி கள் அன்றாடம் பெரும் சிர மங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் தற்போது கிளிநொச்சி நகருக்கான பேருந்து நிலையம் அமைக் கப்பட்டு வருகின்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினூடாக அறுபது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் மூலம் இலங்கை போக்கு வரத்து சபை பேருந்துகளும் தனியார் சேவைகளுக்கு மான நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருகின்ற போதும் அது உரிய முறை யில் அமைக்கப்படவில்லை யென்றும் ஒப்பந்த விடயங் கள் தொடர்பில் எந்த விட யங்களும் காட்சிப்படுத்தப்பட வில்லை எனவும் பல்வேறு தரப்புக்களும் குற்றஞ் சாட்டி யுள்ளன. (2-315)

### விவசாய அமைச்சின்

# ஆலோசனைக்குழுக் கூட்டம் மாங்குளத்தில் நடைபெற்றது



(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண விவ சாயமும் கமநல சேவை கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் ,மீன்பிடி , நீர்வழங்கல் மற்றும் சுற் றாடல் அமைச்சினுடைய மாதாந்த ஆலோசனைக்குழு கூட்டம் மாங்குளத்தில் அமைந்துள்ள பிரதி நீர்ப் பாசன பணிப்பாளர் பணி மனை மாநாட்டு மண்டபத் தில் நேற்று காலை நடை பெற்றது

இக்கூட்டத்தில் விவ சாயமும் கமநல சேவை களும் கால்நடை அபிவிரு த்தி , நீர்ப்பாசனம், மீன்பிடி , நீர்வழங்கல் மற்றும் சுற் றாடல் தொடர்பான திணைக் களங்களால் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள், இவற்றிலுள்ள குறைபாடுகள் தொடர்பில் கலந்தாலோசிக் கப்பட்டது

இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமை ச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்குமாகாண சபை உறுப் பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், ம தியா கராசா, இ.இந்திரராசா, வை.தவநாதன் மற்றும் திணைக்கள தலைவர்கள், திணைக்கள உயரதிகா ரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்த னர். (2-281)

# சட்டவிரோத மணல் அகழ்வு; வளங்கள் அழிப்பு; வீதிகள் சேதம்




## அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட் டத்தின் புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, அம்பலப் பெருமாள்குளம் ஆகிய பகு திகளில் தொடரும் சட்ட விரோத மணல் அகழ்வு களால் குடியிருப்பு வீதிகள் மற்றும் பிரதான வீதிகள் என்பன மிக மோசமாக சேத மடைந்து வருகின்றன இத னைக் கட்டுப்படுத்த வேண் டிய அதிகாரிகள் இதற்கான அனுமதியை வழங்கி தங் களது வளங்களை அழித்து வருகின்றனர் என்றும் கிராம மக்கள் குற்றம் சாட்டி யுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மேற்படி பகுதிகளில் தொடர்ந் தும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற் கொள் ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் இந்தப்பகுதி களில் இவ்வாறு அகழ்வு செய்யப்படும் மணல் விற் பனைகளை நடத்துவதற்கு தனியாருக்கான அனுமதி களும் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் மாதாந்தம் இப் பிரதேசங்களில் இருந்து அகழ்வுசெய்யக்கூடிய மணலை விட மேலதிக மணல் அகழ் வுகள் மேற்கொள்ளப் படு கின்றன.

இவ்வாறு அகழ்வு செய் யப்பட்டும் மணல் யாவும் டிப்பர், லொறி ஆகிய வாக னங்களிலும் வெளி மாவ ட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறு மிகவும் பின் தங்கிய மேற்படி கிராமங் களில் உள்ள கிராமிய வீதி கள்.பிரதான வீதிகள் மிக மோசமாக சேதமடைந்துள் ளன. இதனால் எந்த போக்குவரத்து வசதிகளும் இல்லாத இந்தக்கிராமங் களில் உள்ள மக்கள் சாதா ரண துவிச்சக்கரவண்டி களில் கூட பயணிக்க முடி யாத நிலையில் வீதிகள் சேதமடைந்துள்ளன.

ஆதலால் இவ்வாறான வளங்கள் அழிக்கப்படுதல் வீதிகள் சேதமடைதல் தொடர்பில் உரிய அதிகா ரிகள் கவனமெடுத்து தமது வளங்களைப் பாதுகாக்க வழிவகை செய்ய வேண்டும் என மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

### புகைப்படத்தில் காணப்படும்

# பிள்ளைகளையும் ஜனாதிபதி இன்று வவுனியா அழைத்துவருவார்

## எதிர்பார்க்கின்றோம் என்கிறார் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி

(குருமன்காடு)

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளை ஜனா திபதி அழைத்து வருவார் என எதிர்பார்க்கின்றோம் என வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட போர் சங்கத் தலைவி தெரிவித் துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டு பின்னர் ஜனாதிபதியுடன் புகைப்படமொன்றில் காணப் படும் தமது பிள்ளைகளை யும் ஜனாதிபதி வவுனியா விற்கு அழைத்து வருவார் என்ற நம்பிக்கையில் நாம் உள்ளோம் என தமிழர் தாயகப் பிரதேசத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரை தேடியறியும் சங்கத் தின் வவுனியா மாவட்ட தலைவி காசிப்பிள்ளை ஜெய வனிதா தெரிவித்தார்.

ஜனாதிபதி இன்றைய தினம் வவுனியா வரவுள்ள நிலையில் அது தொடர்பாக கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரி விக்கையில்,

இன்று 239 ஆவது நாளாகவும் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றோம். நாம் சர்வதே சத்தின் உதவியையே நாடி நிற்கின்றோம். எனினும் இந்நிலையில் வவுனியா விற்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இன்று வருகை தரவுள்ளார்.

எனவே, வவுனியாவிற்கு வருகின்ற ஜனாதிபதி நாம் உணவு தவிர்ப்பில் இருக்கும் இடத்திற்கு வருவார் என்ற நம்பிக்கையுடன் இருக்கின் றோம். அவ்வாறு வருகின்ற



ஜனாதிபதி அவருடைய தேர் தலின் போது பிரசுரமான படத்தில் நிற்கும் காணாமல் போன ஐந்து பிள்ளைகளில் ஒருவரையாவது கொண்டு வந்து ஒப்படைப்பார் என நம்புகின்றோம்.

எமது இந்த நம்பிக் கையை உடைக்கும் பட்சத் தில் எமது இந்தப் போராட்டம் இன்னும் மேலோங்கி பெரியதொரு போராட்டமாக மாறும் எனவும் தெரிவித் தார். (2-250)

# 3ஆம் கட்ட வரட்சி நிவாரணம் வழங்க 60 மில்லியன் நிதியொதுக்கீடு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மூன்றாம் கட்ட நிவாரணத்திற்காக 60 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 25 ஆயிரத்து 132 குடும்பங்கள் வரட்சி காரணமாக பாதிப் படைந்துள்ளன. அவர்களுக் கான முதலாம் மாதத்திற் கான இரண்டு கட்ட நிவா ரணத்திற்காக 123 மில்லி யன் ரூபாய் ஒதுக்கீடு செய் யப்பட்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டது. இரண்டாம் மாதத்திற்கான அதாவது மூன்றாம் கட்ட நிவாரணத் திற்காக 60 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப் பெற் றுள்ளது.

விரைவுபடுத்தி மூன்றாம் கட்ட நிவாரணத்தை வழ ங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (2-250)



வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் கேதாரகௌரி விரதத்தின் காப்பு கட்டும் நிகழ்வு இடம்பெற்றபோது ஆலய பிரதம குரு வழிபாடுகளை நடத்துவதை படங்களில் காணலாம்.


(படங்கள்-குருமனகாடு செய்தியாளர்)

# பிரித்தானியர் கால மரங்கள் அகற்றல் புதிய மரங்களை நடுமாறு மக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா, ஏ-9 வீதியில் விழும் நிலையில் காணப் படும் பிரித்தானியர் கால மரங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அகற்றப் படுகின்றன.

வவுனியா, ஏ-9 வீதியில் பிரித்தானியர் ஆட்சிக் காலத் தில் நாட்டப்பட்ட வாகை மரங்கள் பல வீதியின் இரு மருங்கிலும் காணப்படுகின் றன. இவை போக்குவரத்து செய்யும் பய ணிகளின் நிழல் தரிப்பிடங்களாகவும், சில நடமாடும் வியாபாரங்களின் வியாபார இடங்களாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தன.



இந்நிலையில், அதில் உள்ள 16 வாகை மரங்க ளில் 9 மரங்கள் உயிர்ப்பிழ ந்து விழும் நிலையில் காண ப்பட்டன. இவை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் முறிந்து அல்லது பாறி விழலாம் என மக்கள் கருத்து தெரிவித்து வந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அவை தற்போது அகற்றப்பட்டு வரு கின்றன. இதே வேளை, குறித்த பகுதியில் மீண்டும் புதிய மரங்களை நடுவதற் கும் உரிய அதிகாரிகள் கவ னம் செலுத்த வேண்டும் என வும் அப்பகுதி மக்கள் தெரி வித்துள்ளனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றமே நல்லிணக்கத்திற்கான முக்கிய அடையாளம்

## நோர்வே தூதுவர் யாழில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

போரால் இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் அவர்களது சொந்தப் பிரதேசங்களில் மீளக் குடியேறுவது மீள் நல்லிணக்கத்திற்கான முக்கியமான அடையாளம் என நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதுவர் தோர்பியோன் கஸ்டட்சேதர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் 11.15 மணியளவில் பலாலி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீளக் குடியேறிய பகுதிகளில் வாழ்வாதார, உட்கட்டுமான மற்றும் பிறதுறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை காணும் போது மகிழ்ச்சியாக உள்ளது. நான் கடந்த முறை தெல்லிப்பழைக்கு வந்த போது கண்டவற்றுடன் ஒப்பிடுகையில் நிறைய மாற்றங்களை காண்கிறேன். சமூகமாக நீங்கள் ஒன்றுபட்டுள்ளீர்கள். உங்களுக்குள் ஒருங்கிணைந்து முன்னேறுகிறீர்கள். அனைத்து மக்களும் தமது சொந்த வாழ்விடங்களுக்குச் சென்று அங்கு மீளக் குடியேறுவது முக்கியமானது.



இதனாலேயே வடக்கில் காணிகள் விடுவிக்கப்படும் நாள் முதல் நோர்வே அரசாங்கம் மீள்குடியேறிய மக்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் மீள் குடியேற்றத்தை வசதிப்படுத்தும் உதவிகளையும் செய்து வருகின்றது. இதுவரை தெல்லிப்பழை, கோப்பாய், திருகோணமலையில் சம்பூர் ஆகிய பகுதிகளில் மீளக்குடியேறிய ஆயிரத்து 400 குடும்பங்களுக்கான உதவிகளை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (யு.என்.டி.பி) துணையோடு வழங்கியுள்ளோம்.

2015 ஆம் ஆண்டு காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியேறத் தொடங்கியது முதல் நோர்வே அரசாங்கம் 300 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான தொகையை உதவித்தொகையாக வழங்கியுள்ளது. தெல்லிப்பழையில் குறிப்பாக நோர்வேயின் உதவிகள் பாதிக்கப்பட்ட பெண்களை நோக்காகக் கொண்டு வழங்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவித் திட்டமானது மாவட்ட மற்றும் பிரதேச அரசாங்க அலுவலர்களுடன் முன்னெடுக்கும் இப்பணியானது நின்று நிலைக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

காணிகள் விடுவிக்கப்பட்டவுடன் முதலில் மீளக் குடியேறியவர்கள் நீங்கள் என்பதனை நான் அறிவேன். உங்கள் சொந்த இடங்களுக்கு நீங்கள் திரும்பியிருப்பது மீள் நல்லிணக்கத்திற்கு முக்கியமான அடையாளமாகும். போருக்குப் பிந்திய சூழலில் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அடிப்படையானதாகும். போருக்கு பிந்திய நிலைமைகளில் இயற்கையான வளங்களை மையப்படுத்திய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பவதானது உணவு, பாதுகாப்பு, தொழில்வாண்மை போன்றவற்றுக்கு முக்கியமானதாகும்.

நோர்வேயானது இலங்கையில் நீண்டகாலமாக அபிவிருத்தி உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. சீநோர் உதவித்திட்டத்தின் கீழ் வடக்கு மீன்பிடித்துறைக்கு நோர்வே வழங்கிய உதவித் திட்டங்கள் உங்களில் சிலருக்கு நினைவிருக்கக் கூடும். சில தசாப்தங்களுக்கு முன்னர் சீநோர் உதவித் திட்டத்தின் கீழ் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதில் காரைநகர் மற்றும் குருநகரில் வள்ளங்கள் மற்றும் மீன்பிடிவலைகள் செய்வதற்கான தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்போது இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் நோர்வே இலங்கையில் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்குமான உதவிகளைசெய்துவருகின்றது.

தேசிய மீன்பிடிக் கொள்கையை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப உதவிகளையும் நோர்வே செய்து வருகின்றது. இவை இலங்கையில் மீன் பிடித்துறையை நின்று நிலைக்கக் கூடியதாக மாற்றும் நோக்கில் செய்யப்படும் உதவிகளாகும்.

இந்த பல நோக்கு கூட்டுறவு கட்டடத்தை திறந்து வைத்து அதனை மக்களிடம் கையளிப்பதில் மகிழ்வடைகின்றேன். இது உங்களுக்கு பயனுள்ளதாக அமையுமென எதிர்பார்ப்பதோடு இதன் துணையுடனும் உங்கள் கடின உழைப்புடனும் வளமான சமூகத்தினை உருவாக்குவீர்கள் என்று நம்புகின்றேன் என தூதுவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



இணுவில் இந்துக்கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை அதிபர் தேவதயாளன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டார். அத்துடன் பாடசாலையின் வகுப்பறையை அழகுபடுத்துவதற்காக தனது 2017ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து நிதி வழங்கிய வகுப்பறைகளையும் பார்வையிட்டார். இந் நிகழ்வில் மாகாணசபை உறுப்பினருடன் வலிகாமம் கல்வி வலய சமூக விஞ்ஞான உதவிக்கல்விப்பணிப்பாளர், உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் மற்றும் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் அங்கஜன்- கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நேர்முகத் தேர்விற்கு தோற்றிய அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் ஜனாதிபதியிடம் கடிதம் ஒன்றினையும் சமர்ப்பித்துள்ளார். அத்துடன் பிரதமருக்கும் கோரிக்கை கடிதத்தினையும் முன்வைத்துள்ளார்.

வடமாகாணத்தில் அரச பாடசாலைகளில் எந்தவித வேதனமும் இன்றி பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றுகின்ற சுமார் 1060 தொண்டராசிரியர்களுக்கு அண்மையில் நேர்முகத்தேர்வு மத்திய கல்வி அமைச்சினால் நடத்தப்பட்டது. இந்த நேர்முகத் தேர்வானது அமைச்சர் வாரியப் பத்திரத்தின் மூலம் 31.12.2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்திருக்கின்ற தொண்டராசிரியர்களுக்கே நடத்தப்பட்டது.

இந்த நேர்முகத்தேர்வின் மூலம் 684 தொண்டராசிரியர்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியானவர் என்று மத்திய கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டது.

ஆனாலும் 182 தொண்டராசிரியர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டு அவர்களுக்கு நியமனம் விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் பாடங்களுக்கு நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அதிபர்கள் தங்களது நிர்வாகத்தின் கீழ் மாணவர்கள் நல்ல பெறுபேற்றினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தகுதியான தொண்டராசிரியர்கள் மூலம் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து வந்தனர்.



முன்னைய காலங்களில் இவர்கள் கல்வி கற்பித்த காலத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் அரச நிர்வாக கொள்கைகளுக்கு அமைவாக அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

முன்னர் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன. ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்திருக்கின்ற தொண்டராசிரியருக்கான நேர்முகத்தேர்வு நடைபெற்றது. இதற்கு அவர்களின் சேவைக்காலத்தை அதிபர்களும் வலயக்கல்வி பணிப்பாளர் உறுதிப்படுத்தி இருந்தனர். தற்பொழுது பாடசாலை சம்பவத் திரட்டு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் உள்வாங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை அரச நிர்வாக கொள்கைக்கு அமைவாக உள்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நவாலி மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

நவாலி மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை பிரதி அதிபர் பொ.ஆறுமுகரஞ்சன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொள்வார். (இ-10)


### தீர்வின்றி 220 ஆவது நாளாக

# காணாமற்போனோரின் உறவினர்களின் கவனயீர்ப்புப் போராட்டம் தொடர்கிறது

(கரணவாய்)

நல்லாட்சி அரசிடமிருந்து உறுதிமொழிகள் எவையும் கிடைக்காத நிலையில் காணாமல் போனோரின் உறவினர்களினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 220 ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

வடபகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தொடர் நடைபெற்று வருகிறது.



அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் கடந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இப்போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை (20.10.2017) 220 ஆவது நாளாகவும் தொடர்ந்து இடம் பெற்றது. (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்குடைபடுவாரா சரத் என் சில்வா? உச்ச நீதிமன்றின் தீர்ப்பு ஒத்திவைப்பு



(கொழும்பு)

மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் மனு தொடர்பான தீர்ப்பை உச்சநீதிமன்றம் நேற்று ஒத்தி வைத்துள்ளது.

மாகாண சபைகளின் தேர்தல் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது மற்றும் அனைத்து மாகாணங்களுக்கும் ஒரே தடவையில் தேர்தலை நடத்துவது ஆகிய விடயங்கள் உள்ளிட்ட பல்வேறு திருத்தங்களை உள்ளடக்கிய சட்டமூலம் ஒன்று கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இதனை கடுமையாக எதிர்த்துள்ளதுடன், அதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றையும் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

எனினும்அவரது மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்யுமாறு சட்டமா அதிபரும் பதில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த நிலையில் சரத் என் சில்வாவின் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா? இல்லையா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக உச்சநீதிமன்ற அமர்வில் பரிசீலிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான மூவர் அடங்கிய அமர்வு இதனை பரிசீலனைக்குட்படுத்தியது. இதன்போது எதிர்த் தரப்பாக ஆஜரான சட்டத் ரணி எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்டவர்கள் நாடாளுமன்றத்தில் சட்டமூலமாக நிறைவேற்றப்பட்ட விடயமொன்றை நீதிமன்றம் கேள்விக்குட்படுத்த முடியாது என்று வாதிட்டனர்.

அது தொடர்பாக முன்னைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் தீர்ப்புகளையும் அவர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு, சரத் என் சில்வாவின் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வது தொடர்பான தீர்ப்பை ஒத்தி வைப்பதாக அறிவித்துள்ளனர். (இ-7)

# துயர் பகிர்கின்றோம்

## திருமதி. மணிமேகலா சந்திரசேகரம்



எமது சங்க உறுப்பினராகிய Dr.திருமதி சண்ஷியா கமலகாந்த் அவர்களின் அன்புத் தாயார் திருமதி மணிமேகலா சந்திரசேகரம் அவர்கள் 21.09.2017 அன்று காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம். (1063)

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை.

# துயர் பகிர்கின்றோம்

## அமரர் ஏஞ்சலா இராஜசூரியர்

யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. துஸ்யந்தி இராஜசூரியர் அவர்களின் அன்புத்தாயார் திருமதி. ஏஞ்சலா இராஜசூரியர் அவர்கள் 19.10.2017 வியாழக்கிழமை இறைபதமடைந்த செய்தி கேட்டு நாம் மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (1081)

புவியியற் கழகம், புவியியற்றுறை
யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

# 30 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர். அ.அன்ரனி விக்ரர்

(களஞ்சியப் பொறுப்பாளர், கட்டிடங்கள் திணைக்களம் யாழ்ப்பாணம்)

மலர்வு 1952 – 03 – 20



உதிர்வு 1987 – 10 – 21

கைபிடித்த மனையாள் கலங்கித் தவித்திட
பிள்ளைகள் மூவர் பரிதவித்துத் துடித்திட
"அப்பா" என அழைக்காமல்
முப்பது ஆண்டுகள் நீளமாய்
மூச்சிழந்த எம் நினைவுகள்–நீங்கள்
மூர்க்கமாய் போருக்குப் புறப்படவில்லை
மனிதாபிமானமாய் பணி செய்தீர்கள்
வல்லரசு எனத் தனக்குத்தானே சொல்லில்
வலிமை சேர்க்கும் அகிம்சை தாயின்
சேலை எரித்தவர்களின் கோழைத்தனத்துள்
பலியாகினீரே– அப்பா

(1020)

827, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# மீண்டும் நீடிக்கப்பட்டது ரயனின் விளக்கமறியல்

மருத்துவ பீட மாணவச் செயற்பாட்டுக் குழுவின் இணைப்பாளர் ரயன் ஜயலத் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ரயன் ஜயலத்தை நேற்று மாளிகாகந்த மேலதிக நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் சுகாதார அமைச்சிற்குள் அத்துமீறி நுழைந்து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் தமக்கு பிணை வழங்குமாறு மருத்துவபீட மாணவ செயற்பாட்டுக் குழு இணைப்பாளர் கொழும்பு மேல்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மான் ஒன்று மீட்பு



(கொழும்பு)

தேயிலை மலையில் காயமுற்ற நிலையில் இருந்த மான் ஒன்றை பொகவந்தலாவை பொலிஸார் மீட்டுள்ளனர்

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சென்மேரிஸ் தோட்ட பகுதியிலே குறித்த மான் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது. (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாவதி பாலசுந்தரம்

(ஓய்வுபெற்ற உணவுப் பகுதி பொறுப்பாளர், தெல்லிப்பளை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை)



ஐயனார் வீதி, பருத்தித்து
றயை பிறப்பிடமாகவும் வசிப்
டமாகவும் கொண்ட பத்மாவதி
ாலசுந்தரம் கடந்த 19.10.2017
ியாழக்கிழமை இறைபதம
டந்தார். அன்னார் காலஞ்சென்
வர்களான செல்வமாணிக்கம்-
ரஸ்வதி தம்பதியினரின் ஏக
த்திரியும் காலஞ்சென்றவர்
ளான வேலுப்பிள்ளை-தெய்
ானை (கட்டுவன்) தம்பதியினரின்
ருமகளும் காலஞ்சென்ற பால
ந்தரத்தின் (கிராம சேவையாளர்,
ரணி) அன்பு மனைவியும்,
ாலாம்பிகை, பாலரஞ்சினி (கனடா),
ாலராஜினி (பதுளை), பாலரஞ்
ன் (புத்தூர் முகாமைத்துவ
தவியாளர், யாழ் மாநகரசபை),
பாலமனோகரி (சுவிஸ்), பத்மலோஜினி (கனடா), பாலராஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவபாலன் (சாரதி,பிரதேச செயலகம் பருத்தித்துறை), சுதாகரன் (கனடா), சிறிஸ்கந்தராஜா (பதுளை மத்திய கல்லூரி), தெய்வரதி (ஆசிரியை, யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), கனகராஜா (சுவிஸ்), ஜெயானந்தம் (கனடா), நிரோஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் தேவாம்பிகை லக்ஷாஜினி,மதுஷா,சாயுகா,சாஜின், சாயூரன்,அட்சாஜினி, அம்சாஜினி, லக்ஷன், இலக்கியா, மதுமிதா, மயூரன், கார்த்திகா, கீர்த்திகா, பிரியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 22.10.2017 ஞாயிற்றுக்கிமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 11,
ஐயனார் வீதி, பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர் (1080)
021 226 0073, 077 617 6720 (ரஞ்சன்)
077 962 4452 (தேவன்)

# 31ஆம் நாள் நினைவில் துயர் பகிர்கின்றோம்

## பொன்னம்பலம் செல்லையா

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் (இலங்கை)

பிறப்பு 1929-03-23

இறப்பு 2017-09-21



தோப்பு அச்சுவேலியை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்லையா 21.09.2017 அன்று இயற்கை எய்திவிட்டார். (அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் இந்திராணி, ஜெயராணி, சிவேந்திரன், பேபிரஞ்சினி, சிவபாலன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.) அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோப்பு,
அச்சுவேலி

(1079)

தகவல்:
பெறாமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஆப்கான் தாக்குதலுக்கு இந்தியா கண்டனம்



(டில்லி)

ஆப்கானிஸ்தானின் கந்த ஹார் மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இத் தீவிரவாத தாக்குதல் ஆப்கானில் பாதுகாப்பான புகலிடமும் ஆதரவும் தொடர்ந்து தீவிரவாதிகளுக்கு கிடைக்கின்றன என்பதை நிரூபிக்கின்றன என இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரவீஷ்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் ஆப்கானின் காந்தகார் மாகாணத்தில் இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை இந்தியா கடுமையாக கண்டிக்கிறது.

இதுபோன்ற கடின காலங்களில் ஆப்கானிஸ்தான் மக்கள் மற்றும் அரசிற்கு இந்தியா துணைநிற்கும் என தெரிவித்துள்ளார். (8)

## போக்குவரத்து கழக கட்டட மேற்கூரை இடிந்து விபத்து

### ஒன்பது பேர் பலி



(தஞ்சை)

நாகை மாவட்டம் பொறையார் அரசு போக்குவரத்து கழக கட்டடத்தின் மேற்கூரை இடிந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் பலியாகியுள்ளனர்.

நாகை மாவட்டம் பொறையாறில் புதிய பேருந்து நிலையம் அருகில் அரச போக்குவரத்து கழக பணிமனை 2 மாடி கட்டடத்தில் அமைந்துள்ளது. இங்கு சாரதிகள், நடத்துநர்கள் தங்குவதற்கான ஓய்வு அறைகள் உள்ளன.

நேற்று அதிகாலை 3.15 மணியளவில் திடீர் என்று கட்டடத்தின் மேற்கூரை பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது. அப்போது ஊழியர்கள் அனைவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்ததால் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

மேல் தளத்தின் கட்டட இடிபாடுகள் விழுந்ததில் கீழ் தளம் தாங்காமல் அதுவும் இடிந்து விழுந்தது. இதனால் கீழ் தளத்தில் தூங்கிய 8 பேர் அதே இடத்தில் உடல் நசுங்கி இறந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் தீயணைப்பு படையினரும் மீட்பு பணியில் ஈடுபட்டனர். மேல் தளத்தில் தூங்கிய 14 பேர் சிறிய காயத்துடன் உயிர் தப்பினர்.

இடிந்து விழுந்த கட்டடம் ஆங்கிலேயர் காலத்து மிகப் பழைமையானது. 1942இல் பழங்கால முறைப்படி சுண்ணாம்பு கல்லால் கட்டப்பட்டது.

கட்டடம் மோசமான நிலையில் இருப்பதாகவும் புதுப்பித்து தருமாறும் போக்குவரத்து ஊழியர்கள் உயர் அதிகாரிகளிடம் தெரிவித்து வந்தனர். ஆனால் அவர்கள் கண்டு கொள்ளவில்லை பணிமனை கட்டடம் இடிந்து 9 பேர் பலியான சம்பவம் போக்குவரத்து கழக ஊழியர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. (8)

## எங்கள் நாட்டிற்குள் ஊ... அமெரிக்காவுக்கு பரிதா...

### வடகொரியா எச்சரிக்கை

(பியொங்யாங்)

வடகொரியாவில் ஊடுருவ முயற்சிக்கும் அமெரிக்க இராணுவத்தினருக்கு மிகவும் பரிதாபகரமான முடிவு உறுதியாக உண்டு என அந்த நாடு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியாவை எச்சரிக்கும் பொருட்டு அமெரிக்காவின் சக்தி வாய்ந்த போர் கப்பல்களில் ஒன்றான USS Ronald Reagan தென் கொரிய கடற்பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தென் கொரிய இராணு வத்துடன் தொடர்ந்து கூட்டுப்பயிற் சியிலும் அமெரிக்க இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மீது குறிவைத்து அமெரிக்கா கடல் சிறப்பு படையினரை களமிறக்கியுள்ளதாகவும், அவர்களுக்கு உதவியாக இங்கிலாந்தின் SAS களமிறங்கியுள்ளதாகவும் தகவல்கள் பரவின.

இந்த நிலையில், தென் கொரிய அமெரிக்க கூட்டுப்பயிற்சியை கிண்டலடித்த கிம் ஜாங் உன், தென் கொரிய

## ஜெ. மரணம் குறித்த விசாரணை எ...

(சென்னை)

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மர்ம மரணம் குறித்து நீதிபதி ஆறுமுகசாமி வரும் 25ஆம் திகதி புதன்கிழமை முதல் விசாரணையை தொடங்கவுள்ளார். சென்னை அப்பலோவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஜெயலலிதா கடந்த ஆண்டு டிசெம்பர் 5இல் காலமானார். அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக பல்வேறு தரப்பிலிருந்தும் தொடர்ந்து புகார்கள் எழுந்தன. அதிமுகவில் இருந்து முதலில் கலகக்குரல் எழுப் பிய ஓ.பி.எஸ். இந்த மர்மத்தை விசாரணை கமிஷன் அமைத்து போக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். அதனை தொடர்ந்து பல்வேறு அதிமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களும் ஜெயலலிதா மரணத்தில் மர்மம் இருப்பதாகவே கருதினர். நீதிமன்றங்களிலும் வழக்குகள் தொடரப்பட்டன. இதனை அடுத்து நீதி விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

## மீட்கப்பட்டது மாராவி நகரம்



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் மாராவி நகரம் தீவிரவாதிகள் பிடியில் இருந்து மீட்கப்பட்டதாக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டுட்டர்ட்டே அறிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடைய அபு சய்யாப் தீவிர வாத குழுவினர் இயங்கி வருகின்றனர். புத்த மதத்தினர், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் இணைந்து பரவலாக வாழும் இந்நாட்டில் இஸ்லாமிய சட்டத் திட்டங்களுக்கு உட்படுத்த ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பாதுகாப்பு படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மாராவி நகரில் பதுங்கி இருந்த ஐ.எஸ். தீவிரவாதிகளின் தென்கிழக்கு ஆசிய தலைவனாக தன்னை அறிவித்துகொண்ட இஸ்னிலான் ஹபிலான் மற்றும் ஒமர் கயாம் மவ்ட்டே ஆகியோர் கடந்த 16 ஆம் திகதி பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பிலிப்பைன்ஸ் நாட்டு பாதுகாப்புத்துறை செயலாளர் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, கடந்த 148 நாட்களாக மாராவி நகரை முற்றுகையிட்டிருந்த தீவிரவாதிகள் ஒடுக்கப்பட்டதாகவும், மாராவி நகரம் தீவிரவாதிகள் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டுட்டர்ட்டே கடந்த 17 ஆம் திகதி அறிவித்துள்ளார். (8)

## தமிழர்களை பாதுகாக்க வேண்டும்

### கர்நாடக அரசிடம் வைகோ அறிக்கை



(சென்னை)

தமிழர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையைக் கர்நாடக அரசு செய்ய வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கையில் கூறி உள்ளார். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

பெங்களூர், மைசூரில் விஜய் நடித்த 'மெர்சல்' திரைப்பட விளம்பரப் பதாகைகளைக் கிழித்ததோடு, கட் அவுட்டுகளை உடைத்து இருக்கின்றார்கள். திரை அரங்குகளில் படம் பார்த்துக் கொண்டு இருந்த தமிழர்களை விரட்டியடித்து வெளியேற்றி, திரைப்படத்தை ஓட விடாமல் கன்னட வெறி அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழர்கள் மீது வெறுப்பை விதைத்து, எதிர்ப்பை வளர்த்து வருகின்ற கன்னட அமைப்புகள், தமிழ்த் திரைப்படங்களைத் திரையிடக் கூடாது என்று கலவரத்தில் ஈடுபடுவதைத் தடுத்து, தமிழர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையைக் கர்நாடக அரசு செய்ய வேண்டும். வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (8)

## ரோஹிஞ்யா குழந்தைகள் நரகத்தில் வாழ்கின்றனர்

### யுனிசெப் அறிக்கை



(நியூயோர்க்)

ரோஹிஞ்யா அகதிகளில் உள்ள குழந்தைகள் அனைவரும் ஊட்டச்சத்துக் குறை வினால் பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித் துள்ளது.

மியன்மாரில் இருந்து பங்களாதேஷத்திற்கு அடை க்கலம் தேடிச் சென்றுள்ள 6 இலட்சம் ரோஹிஞ்யா முஸ் லிம் அகதிகளில் 58 சத வீதம் பேர் குழந்தைகள். அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் குழந்தைகள் குறித்து ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (யுனிசெப்) கடந்த 8 வாரங்களாக நடத்திய ஆய்வின் அறிக்கையை ஜெனிவாவில் நடைபெற்ற நிதி திரட்டும் நிகழ்ச்சியில் வெளியிட்டது.

அந்த அறிக்கையில், "முகாம்களில் உள்ள குழந்தைகளில் 5இல் ஒரு குழந்தை ஊட்டச்சத்துக்குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள அனைத்து குழந்தைகளும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அகதிகளுக்கு சுத்தமான நீர், உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ உதவிகள் செய்யப்பட வேண்டும். சுத்தமான நீர் குடிக்காவிட்டால் கொலரா போன்ற நோயால் பாதிக்கப்படுவர்.

குழந்தைகளுக்கு எவ்வித உதவியும் கிடைப்பதில்லை. அவர்கள் இந்த இடத்தை நரகமாக கருதுகின்றனர். அவர்களை பாதுகாக்கும் பணியில் யுனிசெப் அமைப்பானது ஈடுபட்டுள்ளது. ரோஹிஞ்யா அகதிகளுக்கு உதவி செய்வதற்கு ஐ.நா. 434 மில்லியன் டொலர் நிதி திரட்டி வருகிறது. அதில் ஆறில் ஒரு பங்கு அங்குள்ள குழந்தைகளுக்காக பயன்படுத்தப்படும் என தெரிவித்துள்ளனர். (8)

## இலங்கையில் விசர் நாய்க்கடிக்குள்ளான பிரான்ஸ் சிறுவன் சிகிச்சை பலனின்றி மரணம்

(பாரிஸ்)

விடுமுறை காலப்பகுதியில் பிரான்சில் இருந்து இலங்கை வந்த 10 வயதான சிறுவனுக்கு திக்வெல கடற்கரையில் வைத்து விசர் நாய் கடித்துள்ளது. இதனை சிறுவனின் பெற்றோர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

இந்நிலையில், நாடு திரும்பிய குறித்த சிறுவன் நோய்வாய்ப்பட்டதை அடுத்து கடந்த 4ஆம் திகதி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனையடுத்து, சிறுவனின் [illegible] சோதனை செய்த [illegible] நிறுவனம், குறித்த சிறுவனுக்கு விசர் கடித்து ரேபிஸ்நோய் தொற்று ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியது.

மேலும், குறித்த சிறுவன் மூலம் பிரான்ஸ் நாட்டிற்குள் ரேபிஸ் நோய் (விசர்நாய் நோய்) பிரான்சிற்குள் வந்திருப்பதை தேசியக் குறிப்பு [illegible] CNR (entre national de refrence) உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், குறித்த சிறுவன் சிகிச்சை பலன் இன்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். மேலும், சிறுவனுக்கு ஏற்பட்டுள்ள நோய் தொற்று தொடர்பில் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சக மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ஊடுருவ முயற்சிக்கும் [...]பமான முடிவே ஏற்படும்



கைப்பாவை படைகளை வைத்துக் கொண்டு கொரியா தீபகற்பத்தை போர் சூழலுக்கு அமெரிக்கா இட்டுச் செல்கிறது என்றார்.

மட்டுமின்றி தங்கள் நாட்டுக்குள் ஊடுருவும் எவருக்கும் பரிதாபகர மான முடிவு காத்திருக்கிறது எனவும் எச்சரித்தார்.

அமெரிக்காவின் செயற்பாட்டை ஹிலாரி கிளின்டனும் எதிர்த்தது மட்டுமல்ல, பேச்சுவார்த்தையே தீர்வு எனவும் தெரிவித்திருந்தார்.

தற்போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் அதே கருத்தை வெளியிட்டு, வடகொரியாவுடன் பேச்சுவார்த்தைக்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். (8)

## பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும்

### வடகொரியா விவகாரத்தில் அறிவுரை கூறும் ரஷ்ய ஜனாதிபதி புடின்

(மொஸ்கோ)

வடகொரியா பிரச்சினையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனைகள் நடத்தி வருகிறது. அதற்கு அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஐ.நா.சபை மூலம் வடகொரியாவுக்கு பொருளாதார தடை விதித்துள்ளன.

மேலும், வடகொரியாவை அச்சுறுத்தும்வகையில்கொரிய தீபகற்ப கடற்பகுதியில் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா கூட்டு இராணுவ பயிற்சி மேற்கொண்டுள்ளது.

இதற்கு வடகொரியாவின் ஐ.நா.சபைக்கான துணை தூதர் கிம் இன்ரியாங் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். ஐ.நா. சபை கூட்டத்தில் பேசிய அவர், எங்கள் நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அந்த நாட்டின் மீது அணு ஆயுத தாக்குதல் நடத்த தயங்க மாட்டோம், என கூறியிருந்தார்.

இது அப்பகுதியில் நிலவி வந்த நிலையை மேலும் பரபரப்பாக்கியுள்ளது.



இந்நிலையில் வடகொரியா பிரச்சனையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகளுக்கு கண்டனம் தெரிவிக்கிறேன்.

ஆனால் இந்த பிரச்சினையில் பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வுகாண வேண்டும்.

அப்படி இல்லாமல் வடகொரியாவை ஓரங்கட்டியோ, அந்நாட்டின் மீது அதிக அழுத்தம் கொடுத்தோ அதை தீர்க்க முடியாது என அவர் கூறியுள்ளார். (8)

## [...]திர்வரும் 25ஆம் திகதி ஆரம்பம்

ஓ.பி.எஸ்.-இ.பி.எஸ். அணி இணைப்பிற்கு முன் ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் தமிழக அரசு குழு அமைத்தது. ஆனால் யார் தலைமையில் இந்த விசாரணை கமிஷன் அ[...]க்கப்படும் என்பதை அறிவிக்க தமிழக அரசு மெத்தனம் காட்டியது. எதிர்க்கட்சிகள் மற்றும் மக்களிடையே அரசின் மெத்தனம் குறித்து கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து ஓய்வு நீதிபதி ஆறுமுகசாமி ஜெயலலிதா மரணம் குறித்து விசாரணை நடத்துவார் என தமிழக அரசு அறிவித்தது.

இந்த விசாரணை குழு அலுவலகம் சேப்பாக் கத்தில் இயங் கும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் விசாரணை கமிஷன் அலுவலகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் வரும் திங்களன்று முடிவடையவுள்ளது. இதையடுத்து புதன்கிழமையன்று விசாரணை தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## இந்தியர்களுக்கு இவாங்காவின் தீபாவளி வாழ்த்து



(வோஷிங்டன்)

உலகம் முழுவதும் உள்ள இந்தியர்களுக்கு தீபாவளி வாழ்த்து தெரிவித்து கொள்வதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்பின் மகள் இவாங்கா தனது 'டுவிட்டர்' பக்கத்தில் கூறியுள்ளார்.

அதில், அடுத்த மாதம் ஐதராபாத்தில் நடைபெறும் உலக அளவிலான தொழில் முனைவோர் மாநாட்டில் பங்கேற்க இந்தியாவுக்கு வருவதற்கு ஆர்வமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த புதன்கிழமை வெள்ளை மாளிகையில் நடைபெற்ற தீபாவளி கொண்டாட்டத்தில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் இவாங்கா கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (8)

## நவாஸ் ஷெரிப் மீது மூன்றாவது ஊழல் வழக்கு

(இஸ்லாமாபாத்)

வருமானத்துக்கு அதிகமாக வெளிநாடுகளில் சொத்து குவித்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப், மூ[...]றாவது ஊழல் வழக்கில் நேற்று குற்றவாளியாக சேர்க்கப்பட்டார்.

அவர்மீது விரிவான விசாரணை நடத்துமாறும், ஆறு மாதங்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் தேசிய பொறுப்புடைமை நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஏற்கனவே அவர் மீது இரு ஊழல் வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், நவாஸ் ஷெரிப் குடும்பத்துக்கு சொந்தமான 'பிளாக் ஷிப்' நிதி நிறுவனம் தொடர்பான வெளிநாட்டு பணப் பரிமாற்றம் மற்றும் வருமானத்துக்கு அதிகமாக வெளிநாடுகளில் சொத்து குவித்தது தொடர்பாக நவாஸ் ஷெரிப் மீது தேசிய பொறுப்புடைமை நீதிமன்ற நீதிபதி முஹம்மது பஷிர் சம்மன் நேற்றுக் குற்றப்பத்திரிகை பதிவு செய்தார்.

நவாஸ் ஷெரிப் லண்டனில் உள்ளதால் அவரது சட்டத்தரணி ஜாபிர் கான் குற்றப்பத்திரிகையின் நகலை பெற்றுக் கொண்டார். ஒரே ஊழல் குற்றச்சாட்டுக்காக தனித்தனியாக மூன்று வழக்குகளை தொடர்ந்துள்ளது தனது கட்சிக்காரரின் (நவாஸ் ஷெரிப்) அடிப்படை உரிமையை மீறும் வகையில் அமைந்துள்ளதாக ஜாபிர் கான் குறிப்பிட்டுள்ளார். (8)

## சந்திரனில் குகை கண்டுபிடிப்பு

### ஜப்பான் விஞ்ஞானிகள் தகவல்



(டோக்கியோ)

ஜப்பானின் 'செலீன்' விண்கலம் சந்திரனில் ஆய்வு நடத்தி வருகிறது. அது எடுத்து அனுப்பிய புகைப்படங்கள் மூலம் சந்திரனில் மிகப் பெரிய குகை இருப்பதை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சந்திரனுக்கு முதன் முதலாக அமெரிக்கா மனிதர்களை அனுப்பி சரித்திர சாதனை படைத்தது. அதை தொடர்ந்து இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள்சந்திரனில் ஆய்வு மேற்கொண்டன.

தற்போது ஜப்பானின் 'செலீன்' விண்கலம் சந்திரனில் ஆய்வு நடத்தி வருகிறது. அது எடுத்து அனுப்பிய புகைப்படங்கள் மூலம் சந்திரனில் மிகப்பெரிய குகை இருப்பதை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அக்குகை 50 கி.மீற்றர் 131 மைல் நீளமும், 100 மீற்றர் அகலமும் கொண்டது. இது சந்திரனில் உள்ள 'மாரியஸ்' என்ற எரிமலை உள்ளது. அது வெடித்ததில் வெளியேறி ஓடிய எரிமலை குழம்பு சென்ற வழி குழாய் போன்ற அமைப்பில் உள்ளது. அதுவே மிகப்பெரிய குகையாக மாறியுள்ளது.

இக்குகை 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவாகி இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். குகையில் சந்திரனுக்கு செல்லும் விண்வெளி வீரர்கள் தங்க முடியும்.

அதன் மூலம் சந்திரனை தாக்கும் அதிகஅளவு தட்பவெப்ப நிலை மற்றும் கதிர் வீச்சில் இருந்து அவர்கள் தங்களை பாதுகாத்து கொள்ளலாம்.

இத்தகவல் ஜியோபிசிக்கல் ஆராய்ச்சி கடிதங்கள் என்ற அமெரிக்க அறிவியல் இதழில் வெளியாகியுள்ளது. (8)

## நியூசிலாந்தின் பிரதமராகிறார் ஜெசிந்தா

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் கடந்த மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தேசிய கட்சி 56 இடங்களிலும், தொழிலாளர் கட்சி 46 இடங்களிலும் வெற்றி பெற்றன. எனினும் ஆட்சியமைக்க 61 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், கூட்டணி ஆட்சி அமைக்க தேசிய கட்சியும், தொழிலாளர் கட்சியும் முயற்சி செய்தன. இதனை தொடர்ந்து பர்ஸ்ட் கட்சியினர், தங்களது ஆதரவு யாருக்கு என்பது குறித்து கட்சியின் தலைவர் வின்ஸ்டன் பீட்டர்ஸ், தனது ஆதரவாளர்களுடன் தீவிர ஆலோசனை நடத்தினார். கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் எம்.பிக்கள் கூட்டமும் நடத்தப்பட்டது. இந்த ஆலோசனையின் முடிவில், தொழிலாளர் கட்சியின் ஜெசிந்தா ஆண்டர்னின்க்கு ஆதரவு அளிப்பதாக வின்ஸ்டன் பீட்டர்ஸ் தெரிவித்தார்.

இதன்மூலம், 10 ஆண்டு காலமாக நீடித்த தேசிய கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. 37 வயதே நிரம்பிய ஜெசிந்தா ஆண்டர்ன் விரை வில் பிரதமராக பதவியேற்கவுள்ளார். துணை பிரதமர் பதவியை வின்ஸ்டன் பீட்டர்சுக்கு வழங்க ஜெசிந்தா விருப்பம் தெரிவித்துள்ள நிலையில் இதுகுறித்து பரிசீலனை செய்து வருவதாக பீட்டர்ஸ் கூறியுள்ளார். ஜெசிந்தா தலைமையிலான அமைச்சவையில் இடம் பெறும் அமைச்சர்கள் குறித்த பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது. மேலும் அவர்களின் இலாகா விபரம் அடுத்த வாரம் வெளியிடப்படும் என தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளது. (8)

## 27 ஆண்டுகளின் பின் துளிர்விடத் தொடங்கியது ஈராக் - சவுதி உறவு



(ரியாத்)

சவுதி அரேபியாவின் பிளைனாஸ் விமான நிறுவனம், 27 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக ஈராக்கிற்கு நேரடி விமான சேவையை வழங்கியுள்ளது.

ஈராக் ஜனாதிபதி சதாம் உசைன் 1990-ஆம் ஆண்டு குவைத் மீது படையெடுத்ததைத் தொடர்ந்து ஈராக் உடனான விமான சேவைகளை சவுதி அரேபியா நிறுத்தியது.

தற்போது ஈராக்குடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ள சவுதி அரேபியா விரும்புகிறது. இதற்கான முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஷியா மதகுரு உள்ளிட்ட ஈராக் உயர் தலைவர்கள் சிலர் சவுதி அரேபியாவுக்கு பயணம் மேற்கொண்டது நல்ல சூழலை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இரு நாட்டு உறவு துளிர்விடத் தொடங்கியதை பிரதிபலிக்கும் வகையில் சவுதி அரேபியாவின் பட்ஜெட் விமான சேவை நிறுவனமான பிளைனாஸ், ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு நேரடி விமான சேவையை தொடங்கியுள்ளது.

27 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு பக்தாத் செல்லும் முதல் விமானம் புறப்பட்டதும் இந்த தகவலை டுவிட்டரில் பதிவு செய்துள்ளது பிளைனாஸ்.

இதற்கிடையே 1990இல் மூடப்பட்ட அரார் பகுதியில் உள்ள தரைவழி எல்லையை மீண்டும் திறக்கவும் சவுதி அரேபியா திட்டமிட்டுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்புக்கு எதிர்ப்பு கிளம்ப மகாநாயக்கர்களே மூல காரணம்

## அஸ்கிரிய பீட செயலாளர் தம்மானந்த தேரர் தகவல்

(கொழும்பு)

அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் காரக சங்க சபாவின் கூட்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்குப் பின்னால் அந்தப் பீடங்களின் மகாநாயக்கர்களே இருப்பதாக அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்புக்கு மகாநாயக்கர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று பிரதமர் கூறியுள்ள நிலையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர்.

"புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளை உடனடியாக கைவிட வேண்டும் என்று வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கைக்குப் பின்னால் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் உள்ளனர்.

தற்போதைய அரசியலமைப்பின் மீது இரு மகாநாயக்கர்களும் திருப்தி கொண்டுள்ளனர். புதியதொரு அரசியலமைப்பு தேவையில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



அதேவேளை, முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பு மாற்றங்களை நிராகரித்து, உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் காரக சங்க சபாவின் முடிவை, பாராட்டுவதாக ராமன்னய மகா நிக்காயாவின் காரக சங்க சபாவின் உறுப்பினரான பேராதனை ராஜபவனா ராமய விகாரையின் பிரதம விகாராதிபதி கெபிட்டியாகொட சிறிவிமல நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

இரு பீடங்களினதும் இந்த முடிவு பொருத்தமானது என்றும் சரியான நேரத்தில் எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# 9 மாதங்களில் 24 பேரின் உயிரைப் பறித்தது செல்பி!

(கொழும்பு)

இந்த ஆண்டின் கடந்த 9 மாத காலப்பகுதியில் புகையிரதம் மற்றும் புகையிரத பாதைகளில் செல்பி எடுக்க முயற்சித்து 24 இளைஞர், யுவதிகள் உயிரிழந்துள்ளதாக தேசிய வீதி பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

புகையிரதங்களினால் இடம்பெறுகின்ற விபத்துக்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டிருப்பதுடன் 2016 ஆம் ஆண்டில் புகையிரத வீதிகளின் ஊடாக பயணிப்பதன் காரணமாக புகையிரதத்துடன் மோதி ஏற்பட்ட 436 விபத்துக்களில் 180 பேர் உயிரிழந்துள்ளதுடன் 256 பேர் காயமடைந்துள்ளதாக அந்த சபை கூறியுள்ளது.

அதேவேளை புகையிரத குறுக்கு வீதிகளில் புகையிரதங்களுடன் வாகனங்கள் மோதி 84 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் கடந்த ஆண்டில் புகையிரதத்தில் பயணிக்கும் போது புகையிரதத்தில் இருந்து கீழே விழுந்து 76 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுபோன்ற புகையிரத விபத்துக்களை குறைப்பதற்காக புகையிரத வீதிகளுக்கு அருகில் வசிக்கின்ற மக்களை தெளிவூட்டுவதற்கு புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-7)

# வசீம் தாஜுடீன் கொலை விவகாரம்; ஆனந்த சமரசேகரவுக்குப் பிணை

(கொழும்பு)

நீதிமன்றில் நேற்று முன்தினம் சரணடைந்த முன்னாள் கொழும்பு பிரதான நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ஆனந்த சமரசேகர வுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பிடியபணைக்கு அமைவாக ஆனந்த சமரசேகரவை கைது செய்ய முடியும் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஆனந்த சமரசேகர கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் நேற்று முன்தினம் சரணடைந்ததையடுத்து அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.



ரக்பி வீரர் வசீம் தாஜுடீனின் படுகொலை வழக்குடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆனந்த சமரசேகரவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு துறைமுகத்தில் இந்தோனேசிய போர்க்கப்பல்



(கொழும்பு)

இந்தோனேசியக் கடற்படையின் இலகு ரக பல நோக்குப் போர்க்கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணமாக வந்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பல் மூன்று நாட்கள் இங்கு தரித்திருக்கும் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கே.ஆர்.ஐ. பங் ரோமோ என்ற இந்தப் போர்க்கப்பலில் 107 இந்தோனேசியக் கடற்படை மாலுமிகள் பணியாற்றுகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் போது இலங்கை கடற்படையினருடன் இணைந்து இந்தோனேசியக் கடற்படையினர் பயிற்சிகளிலும், நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மனதில் உறுதி; வார்த்தையில் இதம்

அண்மையில் குடும்ப நபர் ஒருவரைப் பார்த்துத் துக்கம் விசாரிக்கப் போயிருந்தேன். எதிர்பாராமல் இள வயதில் தந்தை இயற்கை எய்திவிட இவர் தலையில் பெரிய பொறுப்பு.

இவரது பெரியப்பாக்கள், மாமாக்கள் மற்றும் சில உறவினர்கள் இவரது இள வயதைப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிற சொத்தையும் வசதிகளையும் இப்படிச் செய்ய வேண்டும் அப்படிச் செய்ய வேண்டும் எனக்குக் கொஞ்சம் தர வேண்டும் என்றெல்லாம் ஆதிக்கம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

நண்பர் தந்தையை இழந்த கவலை போதாது என்று இந்தக் கவலையை வேறு சேர்த்துக் கொண்டு என்னிடம் ரொம்பவும் சோகமாப் பேசினார்.

இந்த உறவினர்களையெல்லாம் எப்படிச் சமாளிப்பது என்றும் கேட்டார்.

முதற்கட்டமாக யார் சொன்னாலும் அமைதியுடனும் பொறுமையுடனும் கேட்டுக் கொள்ளுங்கள். எல்லாம் எனக்கும் தெரியும் என்கிற தொனியில் ஏதும் பேசிவிடாதீர்கள். இப்போது எந்த முடிவையும் எடுக்கக் கூடிய நிலையில் நான் இல்லை என்று இதமாகச் சொல்லி விடயத்தை ஆறப் போடுங்கள்.

உங்கள் மனதிற்குச் சரி என்று படுகிற முடிவை மட்டும் எடுக்காமல் நல்லது, கெட்டதுகளையும் சீர் தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். உங்கள் உறவினர் சொன்ன யோசனைகளுக்கு எதிரான முடிவை எடுக்க நேர்ந்து அதற்கு எதிர்ப்புக் கிளம்பினால் நான் அப்படித்தான் செய்வேன் என்கிற பாணியில் பேசாமல் ஏன் அப்படிப்பட்ட முடிவை எடுக்க நேர்ந்தது என்று பக்குவமாக விளக்கி உங்கள் பக்கம் அவர்களை இழுக்கப் பாருங்கள். நிச்சயம் பிரச்சினை வரும் என்கிற விடயங்களை மட்டும் ஆறப் போடுங்கள்.

இவனிடத்தில் நம் ஜம்பம் எதுவும் சாயாது என்கிற முடிவுக்கு உங்கள் உறவினர்கள் வந்ததும் அப்புறம் உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். எக்காரணம் கொண்டும் தீர்மானமாக இருக்கின்ற விடயங்களில் எடுத்தெறிந்து பேசிவிடாமல் பார்ப்போம் பெரியப்பா! இருக்கட்டும் மாமா என்கிற பாணியிலேயே அணுகுங்கள். எல்லோரும் ஒதுங்கி விடுவார்கள் என்றேன்.

நீண்ட இடைவேளைக்குப் பிறகு மறு சந்திப்பு நேர்ந்த போது இப்போது நிலவரம் எப்படி? என்றேன்? என் மாமா சொல்றார் நீ பெரிய ஆளுப்பா. விட்டால் எனக்கே யோசனை சொல்லுவாய் போலத் தெரிகிறது என்கிறார் என்றார்.

நான் ஊருக்கு வரவில்லை. உனக்கு கடன் தரமாட்டேன். நான் வீட்டைக் காலி செய்ய மாட்டேன் என்று எந்தத் தீர்மானத்திற்கு வந்தாலும் சரி அதிலே நாம் உறுதியாக இருக்கலாம். தவறில்லை.

ஆனால் உறுதியாகவும் பிடிவாதமாகவும் இருப்பதாக வெளிக்காட்டிக் கொள்ள வேண்டும் என்பதில்லை.

இல்லை நீங்க போயிட்டு வாங்க எனக்கென்னவோ வெளியில் கிளம்பிற மூட் இல்லை என்றும் எனக்கும் சூழ்நிலை சரியில்லை என்றும் ரொம்ப ராசியான வீடுங்க இது என்றும் சொல்லி மற்றவர்களை வெல்ல வேண்டும்.

வர முடியாதுன்னா வரமுடியாதுதான். தர முடியாதுன்னா தரமுடியாதுதான். காலி பண்ண முடியாதுன்னா காலி பண்ண முடியாதுதான். உன்னால் முடிஞ்சதைப் பார்த்துக்கோ என்றெல்லாம் பேசி மனத்தில் உள்ள உறுதியை வெளிப்படுத்தி எதிரிகளையும் மற்றவர்களையும் உசுப்பி நாமும் பொல்லாப் பெயர் வாங்கக் கூடாது. குரலின் உறுதி காரியத்தையே கெடுத்துவிடும்.

காரிய வாதிகள் வார்த்தையில் இதம் காட்டியே எல்லாவற்றையும் சாதித்து விடுகிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர் முட்டிக்கான அடிக்கல் நேற்று நண்பகல் நாட்டி வைக்கப்பட்டது. பக்தர்களின் ஒரு கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் இத் தேர் முட்டி அமைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அலுவல்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கலந்து கொண்டிருந்தார். (படங்கள்:- மகாலிங்கம்)

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

வவுனியா தரணிக்குளத் தில் பல்வகை பிரச்சினைகளு க்கு முகம்கொடுக்கும் பெற்றோ ர்களை இழந்த குடும்பங்க ளில் உள்ள பிள்ளைகளை தெரிவு செய்து அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா வெளிச்சம் அறக்கட்டளையின் மூலம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் தலைவர் பா.லம்போதரன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், வெளிச்சம் அறக்கட்டளையின் செயலாளர் தி.கார்த்திக், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ராகுல், வடக்கு மாகாண சபை உறுப்பினர் டாக்டர் ப.சத்தியலிங்கத்தின் இணைப்பாளர் பா.சிந்துஜன், தமிழ்த்தேசிய இளைஞர் கழக உறுப்பினர் வ.பிரதீபன் மற்றும் சங்க உறுப்பினர்கள், பெற்றோர், பிள்ளைகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்தோடு பெற்றோரை இழந்த ஒரு மாணவனுக்கு கற்றல் உதவிக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன. எனவே குறித்த சான்றுப்பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 2 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடவடிமுறைச் சட்டக் கோவையின் 431(2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழக்கு இல. MC/1525/EX/17, சான்றும் பொருள். இலக்கம் PR/838/17, சான்றுப் பொருள் விபரம் NPQC 6506 இலக்க முச்சக்கரவண்டி. மறுதவணை-16.01.2018.

வழக்கு இல. AR/1076/17, சான்றும் பொருள் இலக்கம் PR/38/15, சான்றுப் பொருள் விபரம் NPXL 6897 இலக்க மோட்டார் சைக்கிள். மறுதவணை-30.01.2018.

வழக்கு இல. AR/1077/17, சான்றும் பொருள் இலக்கம் PR/24/16, சான்றுப் பொருள் விபரம் NPBCD 2922 இலக்க முச்சக்கரவண்டி. மறுதவணை-30.01.2018.

வழக்கு இல. AR/1063/17, சான்றும் பொருள் இலக்கம் PR/1856/17, சான்றுப் பொருள் விபரம் 69746962 இலக்க துவிச்சக்கரவண்டி. மறுதவணை-20.02.2018.

வழக்கு இல.34013, சான்றும் பொருள் இலக்கம் PR/192/13, சான்றுப் பொருள் விபரம் NPXL 2580 இலக்க மோட்டார் சைக்கிள். மறுதவணை-20.02.2018 என பதிவாளர் அறிவித்துள்ளார்.(இ)

## ஜே.ஆரின் பேரன் தேர்தலில் போட்டி



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிடப் போவதாக முன் னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்த்தன அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

பிரதீப் ஜயவர்த்தன தற்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக செயற்பட்டு வருகின்றார். தனக்கு தாமரைமொட்டு சின்னத்தில் போட்டியிட, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடமிருந்து அழைப்பு வந்ததாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## கைப்பணி பயிற்சியை நிறைவுசெய்த 48 பயனாளிகளுக்கு உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபை யாழ்மாவட்டத்தில் நடத்தப்பட்ட கைப்பணிப் பயிற் சியை நிறைவு செய்த 48 பயனாளிகளுக்கு 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் வழ ங்கப்படவுள்ளன.

அந்தவகையில் வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த 17 பேருக்கும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மறவன்புலவு கிராமத்தைச் சேர்ந்த 16 பேருக்கும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிங்கைநகர் கிராமத்தைச் சேர்ந்த 15 பேருக்கும் தலா 8 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி அந்தந்த பிரதேசங்களில் வைத்து வழங்கி வைக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபை அறிவித்துள்ளது. (இ-9)

## மணல், கல் பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் மற்றும் கற்கள் 27.10.2017 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்பட வுள்ளது.

குறித்த மணல் மற்றும் கற்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் மணல் மற்றும் கற்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும். அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக்கொள்ளும் மணல் மற்றும் கற்களை அன்றைய தினம் உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# உரமானியக் கொடுப்பனவு பதிவுகளை பூர்த்தி செய்யும் கால அட்டவணை

## துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய்கமநல சேவை நிலையத்தின் கீழ் 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளின் உரமானியக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் கால அட்டவணையை துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

எதிர்வரும் காலபோக நெற் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் அனைவரும் உரமானியக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களை அறிவிக்கப்பட்டுள்ள கால அட்டவணைக்கேற்ப காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்கு நேரில் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இதற்கமைய, இன்று சனிக்கிழமை ஐயங்கன்குளம் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கான உரமானியக் கொடுப்பனவுப் பதிவுகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை அம்பலப்பெருமாள் குளம், யோகபுரம் மத்தி, குஞ்சுக்குளம் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் மறுநாள் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோட்டை கட்டிய குளம், அனிஞ்சியன்குளம் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை கல்விளான், புகழேந்தி நகர், அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் உரமானியக் கொடுப்பனவுப் பதிவுகள் நடைபெறவுள்ளன.

இதேபோன்று எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை தென்னியன்குளம் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கும் மறுநாள் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாரதி நகர், யோகபுரம் கிழக்கு, துணுக்காய் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும், எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை யோகபுரம் மேற்கு, ஆலங்குளம் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும், இறுதியாக எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புத்துவெட்டுவான் மணற்குளம், மருதங்குளம் ஆகிய கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்குமான உரமானியக் கொடுப்பன பதிவுகள் நடைபெறவுள்ளன.

இந்த உரமானியக் கொடுப்பனவை கடந்த வருடம் பெற்றுக் கொண்ட விவசாயிகள் பதிவுகளை மேற்கொள்ள வருகை தரும் போது,

கடந்த வருடம் உரமானியக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்திய வங்கிப் புத்தகம், அதன் விபரங்கள் அடங்கிய முகப்பு பகுதியின் நிழல் பிரதி, தேசிய ஆள் அடையாள அட்டையின் மூலப் பிரதியும் அதன் நிழல் பிரதி ஆகியவற்றுடன் வருகை தர வேண்டும்.

இதேவேளை, கடந்த வருடம் நெற் செய்கையை மேற்கொண்ட நிலையில் இம்முறை பிறிதொரு கிராம அலுவலர் பிரிவில் நெற் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளும், புதிதாக இம்முறை நெற் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளும் வருகை தரும் போது,

தேசிய ஆள் அடையாள அட்டையின் மூலப் பிரதியுடன் அதன் நிழல் பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும்.

கடவுச் சீட்டு அளவிலான நிழல் படத்தில் ஒன்று, நடைமுறையில் உள்ள வங்கிப் புத்தகமும், அதன் விபரங்கள் உள்ளடங்கலாக நிழல் பிரதி ஆகியவற்றுடன் தங்கள் பகுதி கமக்கார அமைப்புக்களுக்கான உரமானியக் கொடுப்பனவு பதிவுத் திகதியன்று நேரில் சமுகம் தரவேண்டும்.

குறிப்பாக தங்கள் பகுதி கமக்கார அமைப்புக்களில் நடப்பாண்டுக்குரிய காலபோக நெற் செய்கை தொடர்பில் பதிவுகளை மேற்கொண்டவர்களும் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்களும் கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ள உரமானியக் கொடுப்பனவுப் பதிவில் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (2-15)

# குற்றத்தை ஒப்புக்கொண்ட உரிமையாளர்களுக்கு 62 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிப்பு

(மல்லாவி)

மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் விஜய ஐங்கரனினால் டெங்கு நுளம்பு ஒழிப்பு தொடர்பாகவும் காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை மற்றும் உற்பத்தி தொடர்பாகவும் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கைகளின் போது 2 வியாபார நிலைய உரிமையாளர் உட்பட டெங்கு நுளம்பு பரவும் சூழ்நிலையில் காணப்பட்ட 6 வீட்டு உரிமையாளர்கள் மீதும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது அனைவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து 62 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

டெங்கு நோய் தாக்கத்தை ஏற்படுத்தும் டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டத்தை முன்னிட்டு மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய கிராமங்களிலுள்ள குடியிருப்புகள், வர்த்தக நிலையங்கள், மக்கள் கூடும் பொது இடங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட பல்வேறு பகுதிகளில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் மேற்கொண்டார்.

இதன்போது, டெங்கு நுளம்பு பரவும் சூழ்நிலையிலும் மற்றும் டெங்கு நுளம்பு குடம்பி உற்பத்தியான நிலையில் காணப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் 6 பேர் மீது முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் வழக்கு தாக்கல்செய்த போது வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி அனைவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து டெங்கு நுளம்பு பரவும் சூழ்நிலையில் காணப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் 5 பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபாய் வீதம் மொத்தம் 7 ஆயிரத்து 500 ரூபாவையும் டெங்கு நுளம்பு குடம்பி உற்பத்தியான நிலையில் காணப்பட்டதுடன் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ள போதும் அதனை அலட்சியம் செய்த வருமான வீட்டு உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு நீதிபதியினால் இவ்வாறான நிலையில் மீண்டும் நீதிமன்றத்திற்கு வரும் நிலையில் கடுமையான தண்டனை வழங்க வேண்டி வரும் என்று எச்சரிக்கைகளையும் செய்துள்ளார்.

இதேவேளை, மாங்குளம் நகரப் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்தமை உட்பட பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய உணவக உரிமையாளர் மீது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதியிடம் உணவக உரிமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம், ஒலுமடு பகுதியில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்த வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் மீது வழக்குத் தாக்கல் செய்த போது வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதியிடம் உரிமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் 20 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்ததுடன் கடுமையாக எச்சரிக்கையும் விடுத்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தச் சவாலையும் எதிர்கொள்ளத் தயார்





## ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை உருவாக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது பொய்ப் பிரசாரங்களை ஒரு சில இனவாத சக்திகள் வெளிப்படுத்தி வருகின்றன. ஆனால் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் விடயத்தில் எத்தகைய சவாலையும் எதிர்கொள்வதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சர்வதேச சதித்திட்டம் உள்ளதாக சிலர் பிரசாரம் செய்கின்றனர். ஆனால் அவ்வாறு எந்த சதித் திட்டமும் இல்லை என்பதனை தெளிவாக கூறுகின்றேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தீபாவளி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் கடந்த மூன்று தசாப்த காலம் மிகவும் மோசமான பயணத்தினை முன்னெடுத்துச் சென்றோம். நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் எமது சமூகத்தில் ஒற்றுமை இல்லாமல் போனது மட்டுமல்லாது எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது. சர்வதேச நாடுகளுடனான எமது நட்புறவு வீழ்ச்சிகண்டது. அவ்வாறான நிலையில் அனைத்தையும் தோற்கடித்து சகல மக்களையும் ஒரு அடையாளத்துடன் பயணிக்கச் செய்து நாட்டினை கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்கு உள்ளது.

அண்மையில் எனக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்த சிவாஜிலிங்கம் உள்ளிட்ட சிலர் என்னுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். எனக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இவர்கள் போராட்டம் நடத்திய போது அவர்களிடம் சென்று என்னுடன் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்தேன். அதற்கமையவே அவர்கள் ஜனாதிபதி செயலகத்தில் என்னை வந்து சந்தித்தனர்.

அதேபோன்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிலரும் என்னைச் சந்தித்தனர். இந்த இருசாராரும் பிரச்சினைகள் குறித்து என்னுடன் கலந்துரையாடினர். அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். இதில் சில காரணிகளை எம்மால் நிறைவேற்ற முடியும். ஆனால் சில காரணிகளை எம்மால் நிறைவேற்ற இயலாது. ஆனால் இவர்கள் என்னுடன் வந்து கலந்துரையாடி அவர்களின் நிலைப்பாட்டினை என்னிடம் தெரிவித்தனர். இதனை வரவேற்கத்தக்க ஒன்றாகவே நான் கருதுகின்றேன்.

பொதுவாகவே தென்னிலங்கையில் வடக்கு மக்கள் குறித்து தவறான கண்ணோட்டமே உள்ளது. அதேபோல் வடக்கிலும் இந்த நிலைப்பாடே உள்ளது. குழப்பங்களை ஏற்படுத்தும் தரப்பாகவும், குழப்பக்காரர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். ஆனால் இவ்வாறான கலந்துரையாடல்களை முன்னெடுத்ததன் பின்னர் நாம் ஒவ்வொருவரும் எமது நிலைப்பாடுகளை சரியாக விளங்கிக்கொள்ளக் கூடியதாக உள்ளது. பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. இரு தரப்பினரும் பிரச்சினைகள் இல்லாது தீர்வை நோக்கி பயணிக்க முடிகின்றது. குறிப்பாக கல்வி, சமூக கட்டமைப்பு ஆகிய விடயங்களில் பிரச்சினைகளை தீர்க்க முடிகின்றது.

அரசாங்கமாக நாம் செயற்படும்போது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் பயணத்தை முன்னெடுத்துள்ளோம். நாட்டில் ஐக்கியத்தை உருவாக்கவும், தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ளவும் மக்கள் மத்தியில் சகவாழ்வினை உருவாக்கவும் முயற்சிக்கின்றோம்.

எந்தவகையிலும் நாடு பிளவுபடாது. முரண்பாடுகள் அதிகரிக்காது. அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் கொள்கையில் நாட்டினுள் அமைதியினை உருவாக்கும் நகர்வில் நாம் ஈடுபடும்போது தவறான கருத்துக்களை சிலர் மக்கள் மத்தியில் முன்வைத்து வருகின்றனர்.

மக்களை தவறான பக்கம் கொண்டுசெல்ல பொய்யான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். மாநாயக்க தேரர்களுக்கு தவறான கருத்துக்களை முன்வைத்து அவர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தும் நடவ்டிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேபோன்றே ஏனைய மதத் தலைவர்களிடத்திலும் தவறான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். மிக முக்கியமாக இந்த அரசியல் அமைப்பு சர்வதேச சூழ்ச்சியென கூறுகின்றனர். சர்வதேசம் சொல்வதற்கு அமையவே இங்கு அரசியல் அமைப்பு உருவாக்கப்படுவதாகவும் கூறுகின்றனர்.

ஆனால் நான் ஒன்றை கேட்க விரும்புகின்றேன். 1957-1958 வரை எஸ்.டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்க செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுத்து ஒப்பந்தம் செய்தார். அன்று அதிகார பகிர்வு தொடர்பில் உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ள முயன்ற நேரத்தில் இவர்கள் சர்வதேச சூழ்ச்சியிலா சிக்கியிருந்தனர். எனவே சர்வதேச சதி ஒன்றும் இல்லை.

இந்த நாட்டில் யுத்தம் ஒன்று உருவாக, விடுதலைப் புலிகள் உருவாக, பிரபாகரன் உருவாக சர்வதேச சூழ்ச்சியா காரணம்? தேவையான நேரத்தில் தேவையான தீர்வு ஒன்றினை பெற்றுக் கொள்ள சரியான தீர்மானம் எடுக்காமையின் காரணமாகவே இந்த முரண்பாடுகள் ஏற்பட்டன. பிரபாகரன் உருவாகவும் விடுதலைப்புலிகள் உருவாகவும் அப்போதைய தவறான அரசியல் தீர்மானங்களே காரணமாகும். மீண்டும் ஒரு யுத்தத்தினை தவிர்க்கவும் பிரபாகரன் போன்று இன்னொரு பயங்கரவாதி உருவாகாது இருக்கவும் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவு மட்டத்தில் சிந்தித்து தெளிவாக தீர்மானம் எடுக்க வேண்டும். அனைத்து தரப்பினரும் ஒன்றாக அமர்ந்து ஒரு அறையில் இருந்து கலந்துரையாடி தீர்மானம் எடுக்க முடியும். சமூக பிரச்சினைகள், மக்களின் பிரதான பிரச்சினைகள் என்ன என்பதை நாம் கண்டறிய இது சாத்தியமாக அமையும்.

அதுவே சமூக அமைதிக்கும் ஒற்றுமைக்கும் தீர்வாக அமையும். உண்மைகளை சரியாக கண்டறிய வேண்டும். நாம் இன்னும் அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கவில்லை. கட்சிகளின் கருத்துக்களையே நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். இதில் முக்கியமான காரணிகளை கருத்தில் கொண்டு அதன் பின்னர் அனைவரும் ஏற்றுகொள்ளக் கூடிய ஒரு அரசியல் அமைப்பினை உருவாக்க முடியும். ஆனால் இதனை வேறு விதத்தில் சிலர் கையில் எடுத்துக்கொண்டு மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களை பரப்பி அரசாங்கத்தை குழப்ப முயற்சித்து வருகின்றனர்.

இந்த நாடு இன்று எங்கு உள்ளது? நாம் எங்கு உள்ளோம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இத்தனை காலமாக தீர்வை பெற்றுக்கொள்ள முயற்சித்த போதும் இனவாத குழப்பகாரர்கள் காரணமாகவே நாட்டில் யுத்தம் ஒன்று உருவாகியது. ஆகவே இப்போதாவது நாம் பிரச்சினைகளை சரியாக விளங்கிக் கொண்டு தீர்வை நோக்கி பயணிக்க வேண்டும்.

மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு யுத்தம் ஒன்று உருவாவதை தடுக்கும் வகையில் நாம் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். நாம் அனைவரும் இந்த நாட்டினை நேசிப்பவர்கள். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டினை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

சந்தேகங்களை தவிர்த்து அனைவரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி நம்பிக்கையுடன் சகோதரத்துவத்துடன் சரியான பாதையினை தெரிவு செய்து நாட்டினை கட்டியெழுப்ப வேண்டும்.

எமது நாட்டின் பிரதான பிரச்சினைகளை தீர்க்கும் நகர்வில் பிரதானமாக இனங்களுக்கு இடையில் சமாதானத்தை கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது. அதன் மூலமாக பலமிக்க சமுதாயம் ஒன்றினை நாம் உருவாக்க வேண்டும். சகல மதக் கோட்பாடுகளிலும் சமூகத்தை சரியாக கட்டியெழுப்ப வேண்டும் என்பதே வெளிப்படுத்தப்படுகின்றது.

ஆகவே அரசாங்கமாக செயற்படும் போதும் மத கோட்பாடுகள் எமக்கு காட்டியுள்ள வழிகாட்டலை பின்பற்றி அதன் மூலம் இலங்கையின் கலாசாரத்தை தெளிவாக விளங்கிக்கொண்டு செயற்பட வேண்டிய தேவை உள்ளது. இலங்கையின் நான்கு மதக் கோட்பாடுகளை கொண்டு இலங்கையர் என்ற ஒரே பயணத்தினை நாம் முன்னெடுக்க வேண்டும். சகல மக்களும் எதிர்பார்க்கும் நல்லாட்சி, சமாதானம் விரைவில் முழுமையாக உருவாக வேண்டும் என இந்த தீபாவளி தினத்தில் பிரார்த்திக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

வெலிமடை அம்பகஸ்தோவ நகரில் உடப்புஸ்ஸலாவை வெலிமடை பிரதான வீதியை மறித்து மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

ஊவா பரணகமை குமாரபட்டி கிராம சேவகர் பிரிவிலுள்ள வல்கணடிய குளத்தின் எல்லையில் சுமார் 100 வருடங்களுக்கும் அதிக காலமாக வசித்து வரும் தம்மை பிரதேச செயலாளரின் தன்னிச்சையான தீர்மானத்தின்படி வெளியேற்ற முற்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற உத்தரவிற்கமைய அப்பகுதியில் உள்ள 4 வீடுகளை மாத்திரம் குறித்த பகுதியை விட்டு அகற்றுவதற்கு அனுமதி கிடைத்துள்ள போதிலும், பிரதேச செயலாளர் நீதிமன்ற அனுமதியற்ற மேலும் சில வீடுகளை அகற்றியுள்ளதாகவும் இதனால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

டயர்களை எரித்து சுலோகங்களை ஏந்தியவாறு, கோஷங்களை எழுப்பி மக்கள் சுமார் 2 மணித்தியாலயங்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சார்க் நாடுகளின் சாரணர் குழு ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு



(கொழும்பு)

ஹர்மன் லூஸ் வெற்றிக்கிண்ண முகாமை பார்வையிடுவதற்காக வருகை தந்துள்ள ஐந்து சார்க் நாடுகளின் தேசிய சாரணர் குழு நேற்று முற்பகல் கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி சாரணர் குழுக்களும் அதிகாரிகளும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்பான உயர் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அன்பளிப்புகளை வழங்கியதுடன், அந்த அதிகாரிகளும் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கினர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும் மகனும் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து நேற்று போராட்டம், பேரணி





(ஏறாவூர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் சவுக்கடி பிரதேசத்தில் வசித்துவந்த இளம் குடும்பப் பெண்ணும் அவரது மகனும் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து மட்டக்களப்பில் போராட்டம் மற்றும் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் மற்றும் பேரணியை மட்டக்களப்பு - கலைமகள் வித்தியாலய மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு - ஏறாவூர் சவுக்கடி பிரதேசத்தில் வசித்துவந்த இளம் குடும்பப் பெண்ணும் அவரது மகனும் கடந்த 18 ஆம் திகதி கொலை செய்யப்பட்டுள்ளமை பிரதேச மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தன்னாமுனை முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய பீதாம்பரம் மதுவந்தி மற்றும் அவரது மகனான 11 வயதுடைய மதுசன் ஆகியோரே கொலை செய்யப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களில் 11 வயதுடைய மதுசன் கலைமகள் வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயின்று வந்தார்.

வீட்டின் கூரை வழியாக கயிற்றைக்கட்டி உள்ளே இறங்கிய அடையாளம் தெரியாத நபர்கள் இவர்களை அடித்துக்கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படுகொலைக்கு எதிர்புத் தெரிவித்து மட்டக்களப்பு - கலைமகள் வித்தியாலய நுழைவாயிலில் ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்புப் பேரணி பிரதான வீதி ஊடாக குடியிருப்பு பிரதேச செயலகம் வரை சென்று நிறைவடைந்தது.

அமைதியான முறையில் இடம்பெற்ற பேரணியின் இறுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குடியிருப்பு கலைமகள் வித்தியாலய சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கருந்து கொண்டனர்.

குறித்த படுகொலையினை கண்டித்தும் குற்றவாளிகள் விரைவாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தும் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (இ-7)

# புகையிரத பாதைகளின் எண்ணிக்கை இரட்டிக்கப்பட வேண்டும்- ரத்ன தேரர்



(கொழும்பு)

புகையிரதபாதைகளின்எண்ணிக்கை இரட்டிக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கோரியுள்ளார்.

அதிவேக பாதைகள் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதனை விடுத்து. புகையிரத பாதைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக உயர்த்த வேண்டும்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணிகள் குருநாகலுடன் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும். கண்டி வரையில் பாதை அமைப்பதனால் ஏற்படக் கூடிய சுற்றாடல் பாதிப்புக்களைவரையறுக்கவேண்டும்.

புகையிரதத்தில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மூன்று புகையிரதத்தில் பயணிக்க வேண்டிய பயணிகள் ஒரே புகையிரதத்தில் பயணிக்கின்றனர்.

புகையிரத பாதைகளின் எண் ணிக்கையை இரட்டிப்பாக உயர்த்தினால் அதன் ஊடாக மக்களின் செயற்றிறனை 50 வீதமாக உயர்த்த முடியும் என அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1224

Search for people, places and things Nagendram Home

### தேவ்




### சாருகேசி




### தர்மி




### சேகர்




### காருண்யன்




### சரணா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவி வித்தியா படுகொலை வழக்கு விசாரணையாளர்களுக்கு பணப் பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் குற்றவாளிகளைக் கண்டு பிடித்த விசாரணையாளருக்கு விசேட பணப் பரிசில்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க இவற்றை நேற்று முன்தினம் வழங்கி வைத்தார்.

யாழ்.புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டுப்பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கின் இறுதித் தீர்ப்பு கடந்த செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி வெளியானது.

இந்த கொலை வழக்கில் குற்றவாளிகளாக இனங் காணப்பட்டுள்ள சுவிஸ்குமார் உள்ளிட்ட ஏழு பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதுடன், இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் இந்த ஏழு பேருக்கும் 30 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், வித்தியா படுகொலை வழக்கில், குற்றப்புலனாய்வுப் பிரிவின் அப்போதைய பணிப்பாளராகவிருந்த சுதத் நாகமுல்ல, விசாரணைகளை நெறிப்படுத்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பீ.ஏ திசார மற்றும் பிரதான விசாரணை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா, பொலிஸ் பரிசோதகர் இளங்கசிங்க உள்ளிட்ட 33 பொலிஸ் அதிகாரிகளுக்கு 13 இலட்சத்து 12 ஆயிரத்து 500ரூபாய் பணப் பரிசில் பகிர்ந்தளிக்கப்பட்டது. (இ-7)

# அரசிற்கும் பொலிஸுக்கும் இடையே துரிதகதியில் நம்பிக்கை அதிகரிப்பு


## அமைச்சர் சாகல தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் பொலிஸாருக்கும் இடையிலான நம்பிக்கை துரித கதியில் அதிகரித்துள்ளதாக அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களை பாராட்டும் வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலம் வரையில் பொலிஸ் சேவை யில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் சுய விருப்பின் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளக்கூடிய திட்டமொன்று அறிமுகம் செய்யப் படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



சிறந்த முறையில் சேவையாற்றிய 1034 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 45 மில்லியன் ரூபா பரிசுத் தொகை வழங்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

# முஸ்லிம் சமூகம் விரக்தி நிலையில்

## அமைச்சர் றிசாத் கவலை

(கொழும்பு)

முஸ்லிம் சமூகம் நம்பிக்கையோடு உருவாக்கிய நல்லாட்சி அரசின் நடவடிக்கைகள் குறித்து அந்தச் சமூகம் இப்போது படிப்படியாக நம்பிக்கை இழந்து, விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக ஐ.நா விஷேட அறிக்கையாளர் பப்லோ டீ கிரீப்பிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீன் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா விஷேட அறிக்கையாளரை நேற்றுக்காலை கொழும்பிலுள்ள ஐ.நா தலைமை அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கலந்து கொண்டு, முஸ்லிம் சமூக அபிலாஷைகள் குறித்து தெளிவுபடுத்தினார்.

இந்த சந்திப்பின் போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தது.

அதனைப் பெற்றுக்கொண்ட விஷேட அறிக்கையாளர் பப்லோ டீ கிரீப், தனது அறிக்கையில் இந்த விடயங்களையும் சேர்த்துக் கொள்வதாக உறுதியளித்தார்.

"முஸ்லிம்கள் தற்போது இந்த அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் மிகவும் கவலையடைந்து வருகின்றனர். மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினை, யுத்த காலத்தில் நடந்த இழப்புகளுக்கான நட்டஈடு வழங்கப்படாமை போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளை இந்த சமூகம் நீண்டகாலமாக எதிர் நோக்கி வருகின்ற போதும், இன்னும் அவை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டே வருகின்றது" என்று தெரிவித்த அமைச்சர் றிசாத், அரசாங்கம் மேற்கொண்டு வரும் தேர்தல் முறை மாற்றம் மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் உட்பட இன்னும் பல மறுசீரமைப்புக்களில், முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளும், கோரிக்கைகளும் உள்வாங்கப்படாத நிலையே இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

எந்தவொரு அரசியல் மாற்றத்திலும் இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனமான முஸ்லிம் சமூகமும் புறக்கணிக்கப்படாது கருத்திற்கெடுக்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச சமூகம், உறுதிப்படுத்த வேண்டும். ஐ.நாவும் இந்த விடயங்களில் கரிசனை காட்ட வேண்டும். சகல நடவடிக்கைகளிலும் முஸ்லிம் சமூகமும் மூன்றாம் தரப்பாகப் பங்கேற்று, நாட்டின் முஸ்லிம் சனத் தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப அவர்களது பங்கினை பெறு வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் வலியுறுத்தினார்.

எந்தவொரு காலத்திலும் முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் பிரிவினையையோ, பிளவினையோவிரும்பாது அனைத்து சமூகங்களுடனும் ஐக்கியமாகவும், ஒருமைப்பாடாகவும் வாழ்ந்து வருகின்றது. எனினும், அண்மைய காலங்களில் இனவாதப் பேச்சுக்களும், செயற்பாடுகளும் முஸ்லிம் சமூகத்தை குறிவைத்து மேற்கொள்ளப்படுவதுடன், அவர்கள் கொச்சைப்படுத்தப் பட்டும், தூஷிக்கப்பட்டும் வருகின்றனர்.

எனவே, இந்த நாட்டில் வெறுப்பூட்டும் பேச்சுக்களையும், செயற்பாடுகளையும் நிறுத்துவதற்கு ஐ.நா காத்திரமான பணிகளை ஆற்றி, இன ஐக்கியம் வலுப்பெற உதவ வேண்டும் எனவும் றிசாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார். (இ-7)

# அரசியல் கைதிகளின் விடயத்தில் அரசு பேரினவாத போக்குடனேயே செயற்படுகிறது

## யாழ்.பல்கலைக்கழக சட்டமாணவர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் அரசியல் கைதிகளின் நீதி விசாரணையில் கடும் இனவாதத்தையும் பேரினவாத போக்குடனேயே அரசாங்கம் செயற்படுகின்றது என யாழ் பல்கலைக்கழக சட்ட மாணவ சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக் கையில்,

இலங்கைத் தீவில் யுத்தம் முடிவுக்கு வந்து பல ஆண்டு காலம் ஆகிவிட்ட போதிலும் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கங்களும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அசமந்தப் போக்கினை பின்பற்றி வருவது நாட்டின் நல்லாட்சியினையும் குறிப்பாக சட்டவாட்சியின் பொறுப்புக் கூறும் தன்மையினையும் கேள்விக்கு உட்படுத்துகின்றது.

தற்போதைய சூழ் நிலையில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் அதிகளவில் பேசி னாலும் எவ்விதமான நீதிப் பொறி முறையுடன் கூடிய அரசியல் கைதிகளின் நீதி விசாரணையில் கடும் இன வாதத்தையும் பேரினவாத போக்குடனேயே செயற்படு கின்றது. கடந்த காலங்களில் நாட்டில் மாபெரும் சதிப் புரட்சிகளை இலங்கை அரசின் இறையாண்மைக்கு எதி ராக செயற்படுத்திய மக்கள் விடுதலை முன்னனியினர் பகிரங்கமான பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட வரலாறுகள் தாராளமாக உள்ளன.

ஆயினும் சிறுபான்மையினராகிய தமிழ் அரசியல் கைதிகள் மீது ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் போக்கு மிகவும்வேதனையானது. இது நாட்டில் பெரும்பான்மையினருக்கு ஒரு நீதி, சிறுபான்மையினருக்கு ஒரு நீதியா? என்ற கேள்வியையும் விதைக்கின்றது.

இப் போது அரசியல் கைதிகளின் விடுதலை என்ற பதத்தினை விட அவர்களுக்கான துரிதமான பக்கச் சார்பற்ற விசாரணையே சட்ட மாணவ சங்கம் வலியுறுத்துகின்றது.

இலங்கை அரசின் இறைமையாண்மைக்கும் பாதுகாப்புக்கும் எதிராக செயற்பட்ட அமைப்பு என தடைசெய்யப்பட்ட அமைப்பாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பினுடைய 12000 புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு தற்பொழுது விடுவிக்கப்பட்ட சூழ்நிலையில் வெறும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இவ் அரசியல் கைதிகளின் விசாரணையை விரைவுபடுத்துவதில் என்ன தவறு இருக்கமுடியும் எனவும் சட்ட மாணவ சங்கம் கேள்வியெழுப்புகின்றது.

ஆகவே சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மிகவும் தவறான வழியில் செயற்படும்அரசாங்கத்தின்போக்கு சட்டத்துறை மாணவர்களாகிய எமக்கு பெரும் அதிர்ச்சியையும் வேதனையும் தருகின்றது.

எனவே துரிதமான முறையில் இலங்கை அரசாங்கம் அரசியல் கைதிகளின் விசாரணைகளை ஆரம்பித்து உரிய தீர்வினை எவ்வித இழுத்தடிப்பு மின்றி வழங்கவேண்டும்.அது வரை நியாயமான முறையில் சட்டமாணவர் சங்கத்தின் போராட்டம் தொடரும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# வெலே சுதாவின் சகோதரன் கைது

(கொழும்பு)

பாரிய போதைப்பொருள் வர்த்தக செயற்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள வெலேசுதாவின்இளைய சகோதரர் தெஹி வளை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டுள்ளார்.

கடவத்தை பகுதியில் 560 மில்லி கிராம் ஹெரோயினுடன் இவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)







வேள்ட்விஷன் நிறுவன அனுசரணையில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் எஸ்.ரி.குமரன்,எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் எழுத்துருவாக்கம் நெறியாள்கையில் உலக கைகழுவுதல் தினத்தை முன்னிட்டு சுகாதார விழிப்புணர்வு செய்தி தாங்கிய சுத்தம் தெரு வெளி ஆற்றுகை புதிய நவீன பரிமாணத்துடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வலிமேற்கு பிரதேசத்தில் அராலி வள்ளியம்மை வித்தியாலயம், சுழிபுரம் காட்டுப்புலம் கெங்காதேவி ஞாபகார்த்த முன்பள்ளி, வட்டுக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாதத இராசி பலன்கள்

## 18.10.2017-16.11.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## புதிய திருப்பங்கள் ஏற்படும்



விருந்தினர்களை உபசரிப்பதில் வல்லவர்களான தனுசு இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். மதிப்பும், மரியாதையும் உயரும். செய்ய நினைத்த காரியங்களை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். தொழில் ஸ்தானமான 10 ஆம் இடத்தில் சந்திரன், செவ்வாய், சுக்ரன் ஆகிய மூன்று கிரகங்களும் இருப்பதால், தொழில் முன்னேற்றம் கருதிப் புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

தொழிலை விரிவுபடுத்துவதற்குப் போதுமான மூல தனத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு வங்கிகளின் ஒத்துழைப்பும் வள்ளல்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அஷ்டமாதிபதி சந்திரன் 10இல் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால், உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்கள் எதிர்பாராத விதமாக வந்து சேரலாம். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. டிசெம்பர் 19 ஆம் திகதி வரை விரயச்சனி உள்ளது. அதன்பிறகு ஜென்மச் சனி நடைபெறும்.

இதற்கிடையில் 12 ஆம் இடமான பயண ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். நேரா நேரத்திற்கு சாப்பாடு தயாராக இருந்தும் அதைச் சாப்பிட முடியாதபடி தொழில் ரீதியாகப் பயணங்கள் அதிகரிக்கும். ஒருசில சமயங்களில் மனப்பயம் ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு, தனியாக தொழில் செய்யலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். ஆனால் அதைச் செயல்படுத்துவது கடினமாகும். விரயச் சனியின் ஆதிக்க காலம் என்பதால், மிகுந்த பொறுமை தேவை. விரோதங்கள் அதிகரிக்கும். வீண்பழிகள் உருவாகும். அதிலிருந்து விடுபட சனிக் கவசம்பாடி சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபடுவது நல்லது.

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் கேது, 8 ஆம் இடத்தில் இராகு சஞ்சரிக்கிறார்கள். வாக்கு, தனம், குடும்பம் என்பதை அறியும் 2 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. இராகு-கேதுக்களுக்குரிய பிரீதியை முறையாகச் செய்வது நல்லது. ஏற்றமும், இறக்கமும் மாறி, மாறி வந்து கொண்டேயிருக்கும். கூட்டாளிகளில் ஒருசிலர் உங்களை விட்டு விலகிச் செல்லலாம். இருப்பினும் ஆற்றல் மிக்கவர்களின் அனுசரிப்பு இருப்பதால் நீங்கள் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. சூரியன் நீசம் பெற்றிருப்பதால் அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு மனக் குழப்பம் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புகளை இனம் கண்டு கொள்வது நல்லது.

வியாழக்கிழமை தோறும் குருபகவானை வழிபடுவதோடு, யோக பலம் பெற்ற நாளில் தெய்வங்கள் போராடி வெற்றிபெற்ற ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடுவது நல்லது.

விருச்சிக புதனின் சஞ்சாரம்

அக்டோபர் 28 ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கிறார். 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், 12இல் சஞ்சரிப்பது நன்மைதான். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். தூர தேசம் தொடர்பாக எடுத்த முயற்சியில், நல்ல தகவல் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் குழப்பம் அகலும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகளுக்காக நீங்கள் வைத்த பஞ்சாயத்துகள் இதுவரை பலன் இழந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது வழக்குகள் சாதகமாகி உங்களுக்கு வரவேண்டிய பங்குத் தொகை வந்து சேரும். வீடு மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அது கைகூடும்.




சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!

நவம்பர் 3 ஆம் திகதி துலாம் இராசிக்கு சுக்ரன் வருகிறார். இது சுக்ரனுக்கு சொந்த வீடாகும். இலாப ஸ்தானத்திற்கு வரும் சுக்ரன் பஞ்சம ஸ்தானத்தைப் பார்க்கிறார். எனவே பிள்ளைகள் வழியில் ஒரு பெரும் விரயம் ஏற்படலாம். இது போன்ற காலங்களில் வாரிசுகளுக்கு வரன் தேடும் முயற்சியில் ஆர்வம் காட்டலாம். திருமண சீர்வரிசை பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்தலாம். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கும் வாய்ப்பு கிட்டும்.

இம்மாதம் முருகப்பெருமானை செவ்வாய்க்கிழமை தோறும் வழிபடுவது நல்லது. சதுர்த்தி திதியில் ஆனைமுகப் பெருமானுக்கும், சஷ்டி திதியில் ஆறுமுகப்பெருமானுக்கும் விரதமிருந்து வழிபட்டு வந்தால் விருப்பங்கள் நிறைவேறும்.

பெண்களுக்கான பலன்கள்!

தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு, விழிப்புணர்ச்சி அதிகம் தேவைப்படும் மாதம் இது. வாங்கல்- கொடுக்கல்களில் கவனம் தேவை. ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எல்லா நாட்களும் இனிய நாட்களாக அமையச் சனிக் கவசம் பாடிச் சனி பகவானை வழிபட்டு வருவது நல்லது. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நேரமிது. பிள்ளைகளை உங்கள் கவனத்தில்வைத்துக்கொள்ளுங்கள். உடன்பிறப்புகளால் உங்களுக்கு நன்மை உண்டு. தாய்வழி ஆதரவும் ஓரளவு கிடைக்கும். உத்தியோகத்தில் சகப் பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வர வேண்டிய சம்பளப் பாக்கியைப் போராடி வாங்கும் சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகும்.

## நிறைந்த தனலாபம் கிடைக்கும்



நிதானத்துடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம் என்று சொல்லும் மகர இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் இராசிநாதன் சனி பகவான் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரத்தில் உயர்ந்த நிலை உருவாகும். பணப் பற்றாக்குறை அகலும். அதே நேரத்தில் ஜென்மத்தில் கேது இருப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். சில சமயங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது.. பிறர் மனம் புண்படும்படி பேசிவிட்டு பிறகு வருத்தப்படுவீர்கள்.

ஏழில் கேது இருப்பதால் வாழ்க்கைத் துணையோடும், வாரிசுகளோடும், குடும்ப உறுப்பினர்களோடும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு அகலும். ஒருசில சமயங்களில் உங்கள் கொள்கைப்பிடிப்பைத் தளர்த்திக் கொள்ள நேரிடும். என்னயிருந்தாலும் சனியின் பார்வை உங்களுக்கு இராசியில் பதிவதால் இனம்புரியாத கவலை உருவாகும். எந்த நேரத்தில் எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதை அந்த நேரத்தில் செய்ய இயலாவிட்டாலும் தாமதம் ஏற்பட்டாவது செய்து முடித்து விடுவீர்கள்.

அஷ்டமாதிபதி சூரியன் வலிமை இழந்திருக்கும் இந்த நேரத்தில், சில நல்ல காரியங்கள் நடைபெறும். குறிப்பாக பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். தொழில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சி வெற்றிபெறும். இதுவரை பகை பாராட்டி விலகியிருந்த உறவினர்கள் இப்பொழுது தானே வந்து சேருவர். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத விதத்தில் நல்ல பொறுப்புகள் வந்து சேரும். குருவினுடைய பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்வீர்கள். பெற்றோர் வழியில் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். தொழிலை விரிவு செய்யும் எண்ணம் மேலோங்கும். வெளியில் கடன் வாங்க வேண்டாம் நாங்களே தருகிறோம் என்று பெற்றோர்கள் எடுத்துரைப்பர்.

6 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். மேலிடத்து நிர்ப்பந்தத்தின் காரணமாக பதவி மாற்றங்களைச் சந்தித்திருந்த் நீங்கள், இப்பொழுது உத்தியோக உயர்வு காண வழிகிடைக்கப் போகிறது. இருக்கும் வேலையிலேயே கூடுதல் பொறுப்பு ஒருசிலருக்கு வந்து சேரும். இம்மாதம் கந்த சஷ்டி விரதமிருந்து சூரசம்காரத்தன்று கந்தப்பெருமானை வழிபடுவதன் மூலம் வந்த துயரங்கள் வாயிலோடு நிற்கும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

விருச்சிக புதனின் சஞ்சாரம்!

ஒக்டோபர் 28 ஆம் திகதி விருச்சிகத்திற்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6,9-இற்கு அதிபதியானவர் புதன். அவர் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது யோகத்தை வழங்குவார். இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். முடங்கிக் கிடந்த முன்னோர் வழிச் சொத்துகள், பஞ்சாயத்துகள் மூலம் பரிசீலனை செய்யப்பட்டு உங்களுக்கு வந்து சேரப்போகிறது. மீாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும்.




சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!

நவம்பர் 3 ஆம் திகதி துலாம் இராசிக்கு சுக்ரன் வருகிறார். உங்கள் இராசி அடிப்படையில் 10 ஆம் இடத்தில் இப்பொழுது குருவும், சுக்ரனும் இணைந்து இருக்கிறார்கள். எனவே, புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். பெண்களால் பெருமை சேரும். கடன்சுமை குறைய நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரை வழி பட்டு வருவது நல்லது. சங்கடஹர சதுர்த்தியன்று விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

பெண்களுக்கான பலன்கள்!

மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தமாதம் பணத் தேவைகள் பூர்த்தியாகும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் அல்லது வீடு வாங்கிக் குடியேற வேண்டுமென்ற உங்க ளது நீண்ட நாள் ஆசை நிறைவேறுவதற் காக வாய்ப்பு உருவாகும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் சச்சரவுகள் ஏற்படாது. பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றவதில் சில தடைகள் ஏற்படலாம். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பெற்றோர்களின்பாசமழையில் நனைவீர்கள். வெற்றிக்கு வித்திட பெருமாள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அதுமட்டு மல்லாமல் கார்த்திகை தோறும் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபட்டு வாருங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## பொறாமை கொள்ளாதே!



தருமன் என்ற ஒரு வியாபாரி இருந்தார். அவர் பெயர்தான் தருமன். ஆனால் அவர் யாருக்கும் மறந்தும் கூட உதவியேதும் செய்து விட மாட்டார். இத்தனைக்கும் அவர் செல்வமற்ற ஏழையல்ல. தங்கம், வெள்ளி வியாபாரம் செய்பவர்தான். அடிக்கடி அவர் வெளி ஊர்களுக்கும் சென்று வியாபாரம் செய்து வருவார். வெளி ஊர்களுக்குச் செல்லும்போது தன் மகன் தேவராஜை விட்டு. வியாபாரத்தைக் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டுப் போவார். அவனும் அவரது வியாபாரத்தைக் கவனித்து வந்தான்.

ஒருமுறை அவர் கடையில் அமர்ந்திருக்கும் போது ஒரு ஏழை அவரது கடைக்கு வந்தார். மிகவும் பரிதாபமான நிலையில் இருந்தார். வற்றிய உடலும் களைத்த முகமுமாகத் தெரிந்தார். பரிதாபமாக தளர்ந்தவராக அவரது கடையின் அருகில் வந்து நின்றார். அவரை சற்றும் சட்டை செய்யாமல் தன் வியாபாரமே குறியாக இருந்தார் தருமன்.

"ஐயா" இரண்டு முறை அழைத்தும் அவரைத் திரும்பிப் பார்க்காது அமர்ந்திருந்தார் தருமன்.

அப்போது அங்கு வந்த அவர் மகன் தேவராஜன் "அப்பா" என அழைத்தான்.

என்ன என்பது போல் அவனைப் பார்த்தார் தந்தை. "அப்பா, இந்தப் பெரியவர் வெகு நேரமாக அழைத்துக் கொண்டு இருக்கிறார். ஏனென்று கேளுங்கள்"

"எல்லாம் யாசகமாகத்தான் இருக்கும் நீ பேசாமல் உள்ளே வந்து வியாபாரத்தைக்கவனி"

"சரியப்பா" என்றபடி உள்ளே வந்து அமர்ந்தான் தேவராஜ்.

அப்போது கடைக்கு ஒரு வாடிக்கையாளர் வந்தார். உள்ளே வந்து தனக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு வெளியே வந்தார். அப்போதும் யாசகம் கேட்டு வந்த முதியவர் அங்கே நிற்பதைக் கண்டு "யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்? வெகுநேரமாக நிற்கிறீர்கள் போல் தெரிகிறதே" என்றார் மென்மையாக.

"ஐயா; நான் ஒரு ஏழை. என் மகளுக்கு பல ஆண்டுகள் மாப்பிள்ளை தேடி இப்போதுதான் அமைந்திருக்கிறது. திருமாங்கல்யமும் புது ஆடை மட்டுமாவது வாங்க வேண்டும் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும். உங்களைப்போன்ற நல்லவர்கள் தருமங்களால்தான் அது நடக்க வேண்டும். அதனால்தான் ஐயாவைப் பார்க்க வந்தேன்" என்றார் பணிவோடு.

அப்போது கடையிலிருந்து வெளியே வந்த தருமன் இவர்களையெல்லாம் நம்பாதீர்கள். பல பேர் இப்படித் தான் வருகிறார்கள். நீங்கள் ஒன்றும் கொடுத்து ஏமாந்து விடாதீர்கள் என்று நண்பரை வெளியே அனுப்பினார். கூடவே "இங்கெல்லாம் நிற்காதீர். வேறு எவனாவது ஏமாளி இருக்கிறானா? என்று பாருமய்யா" என்று அவரைத் துரத்தாத குறையாக விரட்டினார். தளர்ந்த நடையுடன் அவர் அவ்விடம் விட்டகன்றார்.

அவர் நடந்த களைப்பால் ஒரு மரத்தடியில் அமர்ந்தார். அப்போது அங்கே வந்த தருமனின் நண்பர் ஐயா உங்களை பார்த்தால் ஏமாற்றுபவராகத் தெரியவில்லை. ஏதோ என்னால் முடிந்தது பெற்றுக்கொள்ளுங்கள் என்று ஒரு சிறிய பொட்டலத்தைக் கொடுத்தார். அதைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டவர் நீங்க மகராஜனாய் இருக்கணும் என்றார் கண்கள் கலங்க.

இதைத் தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த தருமன் தனக்குள் சினம் கொண்டார். "பிழைக்கத் தெரியாத மனிதர். சரியாக ஏமாந்து விட்டார். எவ்வளவு சொல்லியும் அவனுக்கு உதவி செய்கிறாரே. என்ன கொடுத்தாரோ என்று தனக்குள் சொல்லிக் கொண்டார். மிக சுலபமாக சம்பாதித்துக் கொண்டாரே இந்தக் கிழவர் என்று அவர் மனதுக்குள் பொறாமையும் எழுந்தது.

நாட்கள் நகர்ந்தன. தருமனுக்கு பொன், வெள்ளியை விட வைர வியாபாரம் செய்ய வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அதனால் ஒரு பெருந்தொகைக்காகத் தன் வீட்டை அடைமானமாக வைத்து பொருளை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். விலை குறைவாக நிறைய வைரம் வாங்க விரும்பி கப்பலில் வெளி நாடு சென்றார். பதினைந்து நாட்கள் ஆகியும் திரும்பி வரவில்லை. இதற்கிடையில் கடையில் இருந்த பொன், வெள்ளிப் பொருட்கள் எல்லாம் களவு போய் விட்டன. இப்போது பொருளை இழந்த மகன் தந்தைக்கு தகவல் சொல்லவும் வழியின்றித் தவித்தவாறு இருந்தான். தருமன் சென்ற கப்பல் புயலில் எங்கோ அடித்துச் செல்லப்பட்டதாகவும் அவர்களைப்பற்றிய தகவல் ஏதும் தெரியவில்லை எனும் செய்தி வந்தது.

(தொடரும்)

## 10.2017 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1520- பேர்டினன்ட் மகலன் சிலியில் புதிய நீரிணை ஒன்றைக் கண்டுபிடித்தார். இது பின்னர் மகலன் நீரிணை எனப் பெயர்பெற்றது.
- ❖1824- ஜோசப் ஆஸ்ப்டின் போர்ட்லண்ட் சீமெந்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- ❖1837- அமெரிக்கப் பழங்குடித் தலைவன் ஒசியோலா கைது செய்யப்பட்டான்.
- ❖1854- புளோரன்ஸ் நைட்டிங்கேல் மற்றும் 38 தாதிகள் கிரிமியன் போர் முனைக்கு அனுப்பப்பட்டனர்.
- ❖1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கூட்டமைப்பினரிடம் வேர்ஜீனியாவில் தோற்றனர். ஆபிரகாம் லிங்கனின் நெருங்கிய நண்பர் "எட்வேர்ட் பேக்கர்" கொல்லப்பட்டார்.
- ❖1876- யாழ்ப்பாணத்தில் கொலரா நோய் வேகமாகப் பரவியது.
- ❖1879- தோமஸ் எடிசன் தனது முதலாவது தொழில் ரீதியான மின்குமிழைப் பரிசோதித்தார். இது 13 மணி நேரம் எரிந்தது:
- ❖1895- ஜப்பானியப் படைகளின் முற்றுகையினால் போர்மோசா குடியரசு வீழ்ந்தது.
- ❖1944- இரண்டாம் உலகப் போர்: முதலாவது கமிகசே ஜப்பானிய விமானத் தற்கொலைத் தாக்குதல், அவுஸ்திரேலிய கப்பல் மீது நடத்தப்பட்டது.
- ❖1945- பிரான்சில் முதற்தடவையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ❖1969- சோமாலியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் சியாட் பார் பதவியைக் கைப்பற்றினார்.
- ❖1987- யாழ்ப்பாண வைத்தியசாலைப் படுகொலைகள்: யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினர் சுட்டதில் வைத்தியர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖1994- சியோல் நகரில் பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் 32 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖2003- குறுங்கோள் ஏரிசின் படங்கள் எடுக்கப்பட்டன.

### பிறப்புகள்

- ❖1772- சாமுவேல் டெய்லர் கோல்ரிட்ஜ், ஆங்கிலேயக் கவிஞர், மெய்யியலாளர் (இ. 1834)
- ❖1790- அல்போன்சு டி லாமார்ட்டின், பிரான்சியக் கவிஞர், அரசியல்வாதி (இ. 1869)
- ❖1833- ஆல்பிரட் நோபல், டைனமைட்டு கண்டுபிடித்த சுவீடிய வேதியியலாளர், நோபல் பரிசை ஆரம்பித்தவர் (இ.1896)
- ❖1877-ஒஸ்வால்ட் அவேரி, கனேடிய-அமெரிக்க மருத்துவர் (இ.1955)
- ❖1911- மேரி பிளேர், அமெரிக்க ஓவியர் (இ.1978)
- ❖1931- சம்மி கபூர், இந்திய நடிகர் (இ.2011)
- ❖1937- தேங்காய் சீனிவாசன், தமிழ் நாடக, திரைப்பட நடிகர், (இ.1988)
- ❖1940- ஜெப்ரி போய்கொட், ஆங்கிலேயத் துடுப்பாளர்
- ❖1943- தாறிக் அலி, பாகிஸ்தான் வரலாற்றாளர், நூலாசிரியர்
- ❖1949- பெஞ்சமின் நெத்தனியாகு, இசுரேலின் 9ஆவது பிரதமர்
- ❖1958- ஆந்தரே கெய்ம், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய-ஆங்கிலேய இயற்பியலாளர்
- ❖1980- கிம் கர்தாசியன், அமெரிக்க நடிகை
- ❖1982- மாட்டல்லாஸ், அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- ❖1805- ஹோரஷியோ நெல்சன், ஆங்கிலேயத் தளபதி (பி. 1758)
- ❖1835- முத்துசுவாமி தீட்சிதர், இந்தியப் புலவர், கர்நாடக இசை மும்மூர்த்திகளுள் ஒருவர் (பி. 1775)
- ❖1949- புனித சியன்னா நகர கத்ரீனம்மாளின் லாரா, கொலம்பிய கத்தோலிக்கப் புனிதர் (பி. 1874)
- ❖2010- அய்யப்பன், இந்தியக் கவிஞர் (பி. 1949)
- ❖2012- யஷ் சோப்ரா, இந்திய இயக்குநர் (பி. 1932)
- ❖2014- கஃப் விட்லம், அவுஸ்திரேலியாவின் 21 ஆவது பிரதமர் (பி. 1916)
- ❖2015- வெங்கட் சாமிநாதன், தமிழக எழுத்தாளர், திறனாய்வாளர்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 120 | 200 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 120 | 105 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 380 | 500 | 400 | 400 |
| தக்காளி | 240 | 140 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 40 | 60 | 50 | 80 |
| கோவா | 180 | 80 | 120 | 130 | 140 |
| கரட் | 100 | 80 | 200 | 90 | 100 |
| பூசணி | 60 | 30 | 60 | 50 | 40 |
| புடோல் | 100 | 70 | 120 | 90 | 80 |
| வாழைக்காய் | 100 | 75 | 120 | 90 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 300 | 240 | 250 |
| பெரிய வெங்காயம் | 130 | 75 | 40 | 140 | 120 |
| பாகற்காய் | 500 | 250 | 400 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 160 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 240 | 80 |
| பயற்றங்காய் | 220 | 130 | 140 | [illegible] | 200 |
| லீக்ஸ் | 200 | 80 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 80 | 70 | 120 | 100 | 100 |
| கறிமிளகாய் | 250 | 240 | 240 | 260 | 260 |
| முருங்கைக்காய் | 150 | 130 | 240 | 400 | 240 |
| போஞ்சி | 240 | 100 | 200 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 | 160 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 200 | 220 | 300 | 320 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60-80 | 80 | 75 |
| இராசவள்ளி | 300 | 380 | - | 400 | – |
| வெங்காயப்பூ | 200 | 200 | 240 | 150 | – |
| முள்ளங்கி | 80 | 60 | 100 | 100 | – |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 15 | 20 | 35 | 20 |
| ஈரப்பலா | 60 | 30 | 60 | 60 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சத்துடன் நமக்கு இருக்கும் தொடர்பை அறிந்து கொள்ளவே பிரார்த்தனை, விரதம், தியானம் என்பன.

- சுவாமி சிவானந்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கந்த சஷ்டி விரதம் போதிக்கும் தத்துவம் யாது?

ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு சமய பாடம் கற்பித்துக் கொண்டிருக்கின்றார்.

மாணவர்களே! கந்த சஷ்டி விரதம் ஆரம்பமாகியுள்ளது. அந்த விரதம் பற்றித் தெரிந்தவர்கள் அதுபற்றிக் கூறுங்கள் பார்க்கலாம் என்றார்.

அவ்வளவுதான் மாணவர்கள் ஒவ்வொருவராக எழுந்தனர். சேர் ஆறு நாள் சாப்பாட்டை ஒறுப்புச் செய்வதுதான் கந்த சஷ்டி விரதம் என்றான் ஒரு மாணவன். அடுத்த மாணவனோ பசித்திருந்து கந்தபுராணம் படிப்பது என்றான்.

மூன்றாமவன் சேர் முருகனுக்கும் சூரனுக்கும் சண்டை நடக்க வேண்டும் என்பதற்காக பிடிப்பதுதான் கந்த சஷ்டி விரதம் என்றான்.

இப்படியே ஒவ்வொரு மாணவர்களும் ஒவ்வொரு பதிலைச் சொல்லிக் கொள்ள மாணவர்களே, நீங்கள் கூறிய பதிலுக்கு அப்பால், கந்த சஷ்டி விரதம் என்பது ஒரு பெரும் தத்துவத்தை உணர்த்துவது என்று கூறிய ஆசிரியர் அதனை பின்வருமாறு விளக்கினார்.

மாணவர்களே! இத்தத்துவத்தை நீங்கள் யாபேரும் கவனமாகக் கேட்க வேண்டும்.

சூரன் என்ற அசுரனை அழிப்பது தொடர்பில் எழுந்ததுதான் கந்த சஷ்டி விரதம். சூரன் என்ற அசுரத்தனம் வேறு எங்கும் இல்லை. எங்களுக்குள்ளும் எங்களோடும் தான் இருக்கிறது.

"நான்" என்ற ஆணவம் எங்களுக்குள் இருக்கும்போது அதுவே சூரனாக மாறுகிறது.

இதுதவிர, எங்களோடு இருப்பவர்கள் எங்களை ஏமாற்றுபவர்களாக இருந்தால் எங்களுக்காக என்று கூறிக்கொண்டு விலைபோபவர்களாக இருந்தால், அவர்கள் நமக்குச் சூரன்கள்.

ஆக, கந்த சஷ்டி விரதம் என்பது இரு பெரும் தத்துவத்தைப் போதிப்பதாகும். அதாவது எங்களுக்குள் இருக்கும் சூரத்தனத்தை அறுக்க - இல்லாதொழிக்க விரதம் இருந்து முருகப் பெருமானை வழிபட்டு அவனை நம் உள்ளத்தில் இருத்துதல்.

இதன்மூலம் தெய்வீகத்தன்மையை எங்களுக்குள் ஏற்படுத்துவதாகும். இதனால் எங்களுக்குள் இருக்கும் சூரத்தனம் வெறுதாகிப் போகும். மாறாக எங்களோடு இருக்கும் சூரத்தனத்தை அழிக்க நாங்கள் முருகன் கைவேலாக மாற வேண்டும்.

இதற்காக சூரன் உடல் அறுத்த வேல் எனும் ஆயுதம் உணர்த்தும். ஆழ்ந்து அகன்று நுண்ணறிய அறிவைப் பயன்படுத்தி எங்களோடு இருக்கும் சூரத்தனத்தை அழிப்பதாகும்.

அதாவது எங்களோடு இருக்கும் சூரத்தனத்தை அழிப்பதற்காக விரதம் இருந்து தெய்வீகத்தின் சக்தியைப் பெற்று அறிவைப் பயன்படுத்தி எங்களோடு இருக்கும் சூரன்களை அகற்றுதல் என்பதாகப் பொருள்படும்.

ஆக, மேற்குறித்த இரண்டு தத்துவங்களையும் குறிப்பதுதான் கந்த சஷ்டி விரதம் என்று கூறியபடி மாணவர்களே! தத்துவம் விளங்கிற்றுதா? என்றார் ஆசிரியர்.

ஆம் சேர் என்றார்கள் மாணவர்கள். சரி தத்துவத்தை உணர்ந்தால், உதாரணம் சொல்லுங்கள் பார்க்கலாம் என்கிறார் ஆசிரியர்.

ஆசிரியர் இவ்வாறு கூறியதும் ஒரு மாணவன் எழுந்து; சேர் நான் செய்தேன், என்னால் தான் செய்யப்பட்டது, நான் நினைத்தால் மட்டுமே நடக்கும் என்று யார் கூறுகிறார்களோ அவர்கள் அனைவரும் தங்களுக்குள் சூரனை வைத்திருக்கிறார்கள்.

இப்படி அந்த மாணவன் கூற, திடீரென எழுந்த இன்னொரு மாணவன்; சேர் இனியும் நாங்கள் சூரன்களுக்கு வாக்களித்து அவர்களைப் பதவியில் இருத்த மாட்டோம்.

ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவினால் நல்லவர்கள், வல்லவர்கள், நேர்மையானவர்கள் இவர்களைத் தேர்தலில் நிறுத்தி அவர்களுக்கு வாக்களித்து அவர்களை எங்கள் பிரதிநிதியாக்குவோம் என்றான்.

ஆசிரியர் அதிர்ந்தார். மாணவர்களே! கந்த சஷ்டி விரதத்தை அனுஷ்டியுங்கள் என்றார்.

## சறுக்கி கீழே விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

ஏறாவூர், ஐயங்கேணி அரிசி ஆலையொன்றில் வேலை செய்த தொழிலாளி ஒருவர் அதன் மாடிப்படியிலிருந்து சறுக்கி கீழே விழுந்து படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திவெளி கிராமத்தை சேர்ந்த செல்லத்தம்பி மனோகரன் என்ற 43 வயதான நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி மாலை மேற்படி அரிசி ஆலையில் உள்ள மாடிப்படியில் ஏறும்போது இவ்விபத்து நேர்ந்துள்ளது.

கீழே விழுந்த அவருக்கு தலைப்பகுதி பாதிக்கப்பட்ட நிலையில், மயக்கமடைந்திருந்த அவர், உடனடியாக ஏறாவூர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 18 ஆம் திகதி பிற்பகல் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ம)

## கற்கைநெறிக்கு விண்ணப்பிக்குக

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவம் சான்றிதழ் கற்கைநெறி (ESBM) 2017/2018ஆம் ஆண்டுக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறிக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 24.10.2017க்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம)

## வழிகாட்டல் வகுப்பு

வட மாகாண இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தால் மார்கழி மாதத்தில் நடைபெறவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணி முதல் யாழ்ப்பாண தொழில் நுட்ப கல்லூரியில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வட மாகாண தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத் தலைவர் ந.அகிலன் அறிவித்துள்ளார். (ம)

## ஒருத்தி திரைப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புகழ்பெற்ற எழுத்தாளர் கி.ராஜநாராயணின் "கிடை" குறுநாவலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட "ஒருத்தி" என்னும் சிறந்த தமிழ்த் திரைப்படம் யாழ்.பொதுசன நூலக கேட்போர்கூடத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு இலவச காட்சியாக காட்டப்படும்.

அம்ஷன்குமாரின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட இத்திரைப்படம் நான்கு உலகத் திரைப்பட விழாக்களில் காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத்திரைப்படத்தைப் பார்க்குமாறு ஆர்வமுள்ள அனைவரையும் யாழ்.பொதுசன நூலக வாசகர் வட்டம் அழைக்கிறது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பொக்கணை, ஊரெழு, உரும்பிராய் கிழக்கு, போயிட்டி, கரந்தன், **கிளிநொச்சி பிரதேசத்தில்** அறிவியல்நகர், NAITA கிளிநொச்சி, **வவுனியா பிரதேசத்தில்** பஸார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி, இலுப்பையடி, பட்டானிசூரிலிருந்து நெளுக்குளம் ஊடாக இராயேந்திரகுளம் வரை, ஓமேகா லைன், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, தாண்டிக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, முள்ளிக்குளம், கீசுட்டான், நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில் நுட்பக்கல்லூரி, மன்னார் **பிரதேசத்தில்** மன்னார் நகரம், பள்ளிமுனை, சிறு நாவற்குளம், நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம், மாந்தை மேற்கு, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் ,லங்கை தொலைத்தொடர்பு நிலையம், மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் மாவட்டசெயலகம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ஆசீர்வாத நிகழ்ச்சி**

காப்பு நாணை தீயிலிட்ட பிறகு வேதியர் தமிழ் வேதமந்திரம் ஓதி மணமக்களுக்கு திருநீறு இட்டு ஆசீர்வதிப்பார். பெரியோர்கள் அவரவர்கள் குல வழக்கப்படி மஞ்சள் அரிசி தூற்றி வாழ்த்துவர். இறுதியில் மணமக்களுக்கு பாலும் பழம் கொடுத்து சிறப்பாசனத்தில் அமரச் செய்வர். (தொடரும்)




சேஷாத்ரி மலையடிவாரத்தில் அகத்தியர் ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார். மணம் புரிந்து ஆறுமாத காலம் வரை மணமக்கள் மலையேறக் கூடாது என்று அவர் உரைத்தார்.

அதனால் ஸ்ரீநிவாசன் அகத்தியர் ஆசிரமத்தில் ஆறுமாத காலம் வரை தன் மனைவி பத்மாவதியுடன் தங்கியிருந்தான்.

ஆறுமாதகாலத்தில் ஆகாசராஜமன்னன் அமரர் உலகு ஏகினான். அவனது இளவல் தொண்டைமான் அரசுக் கட்டிலில் அமர்ந்தான். ஆறாவது மாதம் கழித்து ஸ்ரீநிவாசன் தன் மனைவியோடு மலையேறினான். (தொடரும்)

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

குடும்பத்தில் யாராயினும் ஒருவருக்கு மார்பக புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்பின் அக்குடும்பத்திலுள்ள ஏனைய பெண்கள் பாதிக்கப்படும் அபாயம் அதிகம். எனவே மார்பகத்தில் ஏதேனும் மாற்றங்கள் (அசாதாரண) ஏற்படின் உடன் வைத்திய ஆலோசனை பெறவும் மார்பக கதிர்ப்படம் (Mamogram) செய்வதும் நன்று.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் மாநகர சபை

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ எவராலும் தமது சொந்த ஆன்மாவையோ, கடவுளையோ அறிய இயலாது. ஆனால், நாம் ஆன்மாவாகவும், கடவுளாகவும் உள்ளோம்.

❖ பண்டைக்காலத்தில் கடவுளை மறுப்பதே நாத்திகமாகயிருந்தது. இப்போது தன்னம்பிக்கையை மறுப்பது நாத்திகமாக உள்ளது.

❖ நம்முடைய பிரார்த்தனைகளில் கடவுளை நம் தந்தையாக ஒப்புக் கொண்டு விட்டு, அன்றாட வாழ்க்கையில் வெளியாரை நம் சகோதரர்களாக அங்கீகரிக்காமலிருப்பதில் நியாயமில்லை.

❖ நாம் செலுத்தும் பணிவுக்கும், மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் ஏதேனுமொரு நலனைத் தரவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கும் வரை உண்மையான அன்பு உண்டாகாது.

❖ உலகத்தில் அனைத்தையும் துறந்து, மன உணர்ச்சிகளின் தீவிரத்தை அடக்கிக் கொண்டு அமைதியை நாடுகிறவனே சுதந்திர புருஷனும் பெரியோனும் ஆவான்.

❖ நமது உள்ளங்களை நாம் எப்போதும் திறந்து வைத்திருந்தால் பிரபஞ்சத்திலுள்ள நல்ல நினைவுகள் அனைத்திற்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.

❖ நாம் அனைவரும் விளக்குகளைப் போல பிறருக்கு ஒளி கொடுத்து பயனுள்ள வாழ்க்கை வாழ்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை கிங்ஸ்ரார் வி.க.நடத்தும் மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் போட்டி

## அளவெட்டி மத்தி சம்பியன்



சங்கானை கிங்ஸ்ரார் வி.க. யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு7 பேர் 5 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 18 ஆம் திகதி அன்று கிங்ஸ்ரார் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் அளவெட்டி மத்தி வி.கழகத்தை எதிர்த்து கொட்டடி இளங்கதிர் வி.க. மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக்கழகம் 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 43 ஓட்டங்களைப் பெற்றது.

அதி கூடிய ஓட்டங்களாக தீபன் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் தயாளன் 1, அஜித் 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி வி.க. ஆரம்பத்தில் தடுமாற்றம் அடைந்தாலும் அஜித்தின் அதிரடியான துடுபாட்டத்தால் அளவெட்டி மத்தி வி.க. 4.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 44 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

அஜித் 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக தயாளனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக அஜித்தும் தெரிவாகினர். (க)

# Milo கிண்ண உதைபந்தாட்டம்

# அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நவிண்டில் கலைமதி வி.கழகம்

Milo கிண்ணத்துக்கான வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் இணைக்கப்பட்ட கழகங்கள் பங்குபெறும் உதைபந்தாட்டச் சுற்று போட்டியில் நேற்று முன்தினம் 19 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில்கரவெட்டி நவசக்தி வி. கழகத்தை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நவிண்டில் கலைமதி வி.கழகம். (க)



# இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது மனோகரா






மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவான நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் 19 ஆம் திகதி அன்று நடைபெற்ற போட்டியில் மனோகரா அணியை எதிர்த்து ஆதி சக்தி அணி மோதியது. ஆட்டத்தில் மனோகரா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக மனோகரா வீரர் கோல் காப்பாளர் தெரிவு செய்யப்பட்டார். (க)




# நட்சத்திரங்களின் போர் உதைபந்தாட்டம் வெற்றிக் கிண்ணத்தை வென்றது மகாஜன



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியால் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வருடாவருடம் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையே (ஸ்கந்தா, மகாஜன, மானிப்பாய் இந்து, யூனியன்) நடத்தப்படும் "நட்சத்திரங்களின் போர்" உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மகாஜன வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது.

யூனியன் கல்லூரியை வென்ற மகாஜனக் கல்லூரி நேற்று முன்தினம் 19 ஆம் திகதி அன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை சந்தித்தது.

இரு அணிகளின் வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் மிகவும் விறுவிறுப்பாக விளையாடினர்.

ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாமையினால் சமநிலை தவிரப்பு உதை மூலம் மானிப்பாய் இந்துவை 7:0 என்ற கோல் கணக்கிலும் வென்று சம்பியனாகியது. (க)

## பொற்பதி பீற்றர்ஸ் அணி வெற்றி

மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டத்தில் நேற்று முன்தினம் 19 ஆம் திகதி அன்று நடைபெற்ற போட்டியில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து பொற்பதி பீற்றர்ஸ் அணி மோதியிருந்தது. போட்டிக்கு பொம்மர்ஸ் வராத காரணத்தால் பொற்பதி பீற்றர்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (க)




அண்மையில் தியகம விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தேசிய மட்ட மெய் வல்லுநர் போட்டியில் 18 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் அருணோதயக் கல்லூரி மாணவன் ர.யதூசன் வெற்றிப்பதக்கத்தை பெற்றுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்









மைலோ கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகிய போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரில் நுட்பமான...

கிடமான வகையில் பயணித்த மோட்டார் கார் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த 09 கிலோவும் 732 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன், சந்தேகத்தின் பேரில் அதில் பயணித்த 04 பேரையும் கைது செய்துள்ளதாக கனகராயன்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்திற்கு ஏ9 வீதி ஊடாக கேரளாக் கஞ்சா கடத்திச் செல்லப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, கனகராயன்குளம் பொலிஸ் அணியினர் ஏ9, வீதியில் கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாக விசேட வீதிப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் கார் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, மோட்டார் காரினுள் மிக மிக நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 9, கிலோவும் 732, கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சா பொதிகளையும், அதனை கடத்துவதற்கு பயன்படுத்திய மோட்டார் காரையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதி உட்பட 28 வயதுடைய 03 நபர்களையும் மற்றும் 33 வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர்களை நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய போது,

சந்தேக நபர்களை நாளை மறுதினம் திங்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம-15)

## அரசு பிற்போடுகின்றது...

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போது அவர் இதனை தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றில் தற்போது பிரச்சினைக்குரிய சூழ்நிலை காணப்படுவதால் இது தொடர்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அமைச்சரவையில் பேச்சுவார்த்தையொன்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார். (ம)

## அரசின் விருந்து...

தியை வெளிப்படுத்தியுள்ளது. தமது மக்களுடைய நலன்களுக்கான இவ்வாறான விருந்துபசாரங்களை புறக்கணிக்க தமிழ் அரசியல்வாதிகள் முன்வர வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரத்தில் தொடர் உண்ணா விரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற தமிழ் அரசியல்கைதிகள் மூவர் தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மேற்கொண்ட சந்திப்பு தொடர்பில் விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்றைய தினம் மதியம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் நடைபெற்றது. இதன் போதே அவர்கள் மேற்கண்ட அதிருப்தியினை வெளியிட்டுள்ளனர்.

அரசியல் கைதிகள் விடயத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தமக்குள்ளேயே முட்டி மோதிக் கொள்கின்றார்களே தவிர இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னிற்கவில்லை. குறிப்பாக இந்த வருட தீபாவளி பண்டிகையை நாம் அரசியல் கைதிகளுக்காக கறுப்பு தீபாவளியாக அனுஷ்டித்து அவர்களுக்காக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு சென்ற போது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வில் தமிழ் அரசியல்வாதிகள் கலந்துகொண்டிருந்தார்கள்.

இதனை விட அரசியல்கைதிகள் விடயத்தை மையமாக கொண்டு தமது சுயலாப அரசியல் மோதல்களை மேற்கொண்டுவருகின்றார்கள். எனவே இது நிறுத்தப்பட வேண்டும். தமிழ் அரசியல் தலைமைகள் அரசியல் கைதிகளது பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒன்றுபட வேண்டும். அரசியல் கைதிகள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 26 நாட்களாக உணவு உண்ணாமல் ஆபத்தான கட்டத்திலும் போராடும் நிலையில், எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் அரசின் விருந்துபசாரத்தில் கலந்து கொள்வது ஏற்புடையதல்ல என்றனர். (ம-4)

## தேரர்களின்...

தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், தற்போதைய சூழ்நிலையில் நாட்டுக்கு புதிய அரசியல் யாப்பு தேவை இல்லை என அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்கள் தெரிவித்துள்ளதையும் நினைவுபடுத்தினார்.

எனவே தேரர்களின் ஆலோசனைக்கமைய புதிய அரசியல் யாப்பை கொண்டு வரும் முயற்சியை அரசாங்கம் கைவிட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (ம)

## ஜனாதிபதியின்...

அவர்களில் ஒருவரான சுலக்சனின் தாயாரான புஸ்பமலர் தெரிவிக்கையில்,

ஐந்து பிள்ளைகளில் மூத்த பிள்ளையை 2009ஆம் ஆண்டு வன்னியில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். சுலக்சனை விடுதலை செய்யுமாறு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்துடன் சென்று ஜனாதிபதியை சந்தித்தோம். அவர் நீதியமைச்சர் சட்டமா அதிபர் என்போர் வெளிநாடு சென்றுள்ளதால் வந்த பின் நல்ல முடிவை தருவதாக கூறுகிறார். அவரின் முடிவுக்காக காத்திருப்பதாக தாயார் தெரிவித்தார். (ம-60)

## தமிழ் அரசியல்...

ற்றமான சந்திப்பாகவே நிறைவுற்றதாகவும் யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. மேலும் ஜனாதிபதி இப் பிரச்சினை தொடர்பாக சாதகமான அறிவிப்பொன்றை வெளியிடுவதற்கு கோரிய கால அவகாசத்துக்குள் அவர் கூறியதை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி நேற்றிலிருந்து யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்து பீட மாணவர்களும் வகுப்பு புறக்கணிப்பிலும் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்குகளை முன்பிருந்தது போன்று வவுனியா நீதிமன்றுக்கு மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்தி தொடர்ச்சியான உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில் அவ் அரசியல் கைதிகளது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றக்கோரியும் வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தார்கள். அதனை தொடர்ந்து வடமாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதியை சந்திப்பதற்கு திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி, பதில் சட்டமா அதிபர், சட்ட ஒழுங்கு அமைச்சர் உள்ளிட்ட குழுவினரை சந்தித்து மாணவர்கள் கலந்துரையாடியிருந்தனர்.

இந்நிலையில் இக் கலந்துரையாடல் தொடர்பாகவும், அது தொடர்பிலான தமது நிலைப்பாடுகள் குறித்தும் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய கூடத்தில் நடத்தியிருந்த போதே மேற்கண்ட தமது நிலைப்பாட்டை அவர்கள் தெரிவித்திருந்தார்கள். இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழக அனைத்துபீட மாணவர் ஒன்றிய தலைவர் கிருஸ்ணமேனன், கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் அனுராஜ் மற்றும் சட்டபீட மாணவன் தனஜயன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்திருந்தனர். இதன்படி அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இச் சந்திப்பில் பல்கலைகழக மாணவர்கள் சார்பில் பிரதானமாக ஐந்து கோரிக்கைகளை நாம் முன்வைத்திருந்தோம். அதாவது அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்ட அரசியல் கைதிகளின் வழக்குகள் மீளவும் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அல்லது யாழ்.மேல் நீதமன்றுக்கு மாற்றப்பட வேண்டும். அரசியல் கைதிகளை, பாலியல் குற்றவாளிகள், மரண தண்டனை குற்றவாளிகள் ஆகிய குற்றவாளிகளுடன் ஒன்றாக தடுத்து வைத்திருக்கூடாது. அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தினூடாக விடுதலை செய்ய வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டமானது நீக்கப்பட வேண்டும். பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சுலக்ஷன் கஜன் ஆகியோரது குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டியதுடன் அவர்களது கொலைக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் ஆகிய ஐந்து கோரிக்கைகளை நாம் ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தோம்.

நாம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி திருப்திகரமான பதிலொன்றை வழங்கியிருக்கவில்லை. குறிப்பாக நாம் கோரிய கோரிக்கைகளுக்கு எம்மை திருப்திபடுத்துவதற்காக மழுப்பலான பதில்களையே வழங்கியிருந்தார். வழக்கு நடவடிக்கைகளை நீதிமன்றுக்கு மாற்றுவது தொடர்பாக நீதியமைச்சரே முடிவெடுக்க முடியும். அது தொடர்பில் தன்னால் எதுவிதமான முடிவினையும் எடுக்க முடியாது என கூறியிருந்ததுடன் இது விடயத்தை நீதியமைச்சிடமே விட்டுவிடுவதாக கூறியிருந்தார்.

இச் சந்திப்பில் அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபடும் தமிழ் அரசியல் கைதி ஒருவரின் சகோதரியான எமது பல்கலைகழக மாணவி கிருஷாந்தி கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது அவர் ஜனாதிபதியிடம் அரசியல் கைதிகளிற்கு மன்னிப்பளிக்காவிட்டாலும் அவர்களது நியாயமான கோரிக்கைகளையாவது நிறைவேற்றுங்கள் எனவும் ஜனாதிபதியாக இல்லாவிட்டாலும் ஒரு தந்தையை போன்றாவது எமக்கு உதவி செய்யுங்கள் என கண்ணீர் விட்டு அழுது கேட்டிருந்தார். இவ் அரசியல் கைதிகளது விடயம் சம்பந்தமாக நாம் ஜனாதிபதியுடன் மேற்கொண்ட சந்திப்பானது எமக்கு எந்தவிதத்திலும் திருப்தியளிப்பதாக அமையவில்லை. முற்றுமுழுதாக ஏமாற்றமாகவே அமைந்துவிட்டது. நாட்டின் தலைவர் என்ற வகையில் அவரால் உடனடியாக செய்யக்கூடியதாக இருந்த நடவடிக்கையை கூட அவர் செய்யவில்லை.

தற்போது நாட்டின் நீதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் வெளிநாட்டில் இருப்பதால் அவர்கள் நாட்டிற்கு வந்ததுமே இப் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடி முடிவொன்றை அறிவிக்க முடியும். அதற்காக எதிர்வரும் புதன்கிழமை வரை கால அவகாசம் தருமாறு ஜனாதிபதி எமக்கு தெரிவித்திருந்தார். எனினும் நாம் இல்லை இன்று (நேற்றுமுன்தினமே) ஒரு தீர்வொன்று தரப்பட வேண்டும் என கூறி அன்று மாலை வரை அங்கே இருந்தோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவளித்து கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் திங்கட்கிழமை பாரிய போராட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இவ்வாறான நிலையில் இப் போராட்டத்தினூடாக அரசியல் கைதிகள் விடயத்தில் வடக்கு கிழக்கு சமூகம் ஒற்றுமையாகவே உள்ளது என்பதை அரசுக்கு தெரியப்படுத்தவே இப் போராட்டமானது முன்னெடுக்கப்படவுள்ளது. எனவே இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாம் நேற்றில் இருந்து முன்னெடுத்துள்ள வகுப்பு புறக்கணிப்பு போராட்டத்திற்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்து சங்கங்களினதும் ஆதரவினை கேட்டிருக்கின்றோம். அத்துடன் பொது அமைப்புக்கள் சிவில் அமைப்புக்கள் என அனைத்து தரப்பினரும் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி எமது போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-4)

## 25 ஆயிரத்துக்கும்...

இணைக்கப்படும் விடயங்களை நாடாளுமன்றில் முன்வைத்து உரையாற்றும் போது சிவில் போக்குவரத்துக்கள் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா இவ்வாறு தெரிவித்தார்.

2007ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு வரையில் நாடு முழுவதும் இடம்பெற்ற வீதி விபத்துக்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 66 ஆயிரத்து 167 ஆகும். இவற்றுள் 25ஆயிரத்து 624 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கில் இடம்பெற்ற போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க இது அதிகமாகும். ரயில் கடவைகளில் இடம்பெறும் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. ரயில் கடவைகளில் கவனத்தில் கொள்ளாது வாகனங்களை செலுத்துவோருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## தலைமன்னாரில்...

யினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தை சேர்ந்த 7 தமிழக மீனவர்கள், ஒரு நாட்டுப்படகில் வந்து தலைமன்னார் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது இலங்கை கடற்படையின் சோதனை நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் கடற்படை முகாமில் பதிவுகள் மற்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இன்று நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர். (ம-9)

## யதார்த்தத்துடன்...

றும் அதிகாரிகளுக்கான வலுவூட்டல் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான வலுவூட்டல் கருத்தரங்கு கடந்தவாரம் புதுடில்லியில் இடம்பெற்றிருந்தது.

இந்தக் கருத்தரங்கில், தற்கால புவிசார் அரசியல் சூழலில், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்தியா உள்ளிட்ட அனைத்துலக பங்களிப்புக்கு வாய்ப்புகள் இல்லை என்றும், யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயற்படுமாறும் வலியுறுத்தப்பட்டதாக தெரிகிறது. (ம)

## உடல்முற்றிலும்...

யில் மேற்குறித்த அரசியல் கைதிகள் மூவரும் தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

27ஆவது நாளாக உணவு இன்றி நீரை மட்டும் அருந்தி வரும் இவர்கள் ஆபத்தான கட்டத்தை அண்மித்துள்ளதால் இவர்கள் இன்று அல்லது நாளை அநுராதபுரம் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-9)

## தமிழ் அரசியல் கைதி...

ஈழத்து சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோவிலுக்கான அக்கரகாரத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஊடகங்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டமா அதிபரும் நீதி அமைச்சரும் நாட்டில் இல்லாத காரணத்தால் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் ஜனாதிபதியால் உடனடியாக முடிவுகளை எடுக்க முடியவில்லை. அவர்கள் தான் முடிவெடுக்க வேண்டும் என்பது ஜனாதிபதியின் விருப்பம். எனினும் நாங்கள் குறித்த கைதிகளுடைய வழக்குகளை அநுராதபுரம் நீதிமன்றிலிருந்து வவுனியா நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரி வருகின்றோம். அதனை அவர்கள் நிறைவேற்றுவார்களா என தெரியவில்லை. மாற்றும் சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆனால் முடிவு அரசாங்கத்திடமே உள்ளது.

ஜனாதிபதி தான் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜனாதிபதி சில தினங்களுக்குள் அதனை செய்வார் என நம்புகின்றேன். என அவர் மேலும் கூறினார். வடகடல் நிறுவன தலைவர் தியாகராசா பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி, யாழ்.மாவட்ட காணி மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-4)

## ஓட்டோ ஓடுவதற்கு...

இவ்வாறு சிவில் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல்சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் வாகன சட்டத்தின் கீழான கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். (ம)

## உணவு தவிர்ப்பை...

கடந்த 4 வருடங்களாக வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு இடமாற்றியதை எதிர்த்து மூன்று தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மாதம் 25ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இவர்களது உறவினர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஜனாதிபதி மைத்திரிபால்வை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். இந்தப் பேச்சுக்களின் உறுதியான முடிவு வழங்கப்படாததைச் சுட்டிக்காட்டிய தமிழ் அரசியல் கைதிகள், தமது வழக்கு மாற்றப்படும் வரையில் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று தெரிவித்தனர். (ம)

## ‘சிங்களே’...

பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேர இதனைத் தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து ஒன்றில் நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா(Green Card)

- 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்
- திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்
- இவ்வருடம் 55000 பேருக்கான வாய்ப்பு

யாழ்ப்பாணம் / வேலணை / கிளிநொச்சி

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500 (C-036)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (1044)

## அமெரிக்க நிறுவன சவுதி கிளை மற்றும் குவைத், கட்டார் நாடுகளில்

McDonald's

மாதம் Rs. 50-175000/- வரை உழைக்க

| உணவு பரிமாறுநர் 150பேர் | சுத்திகரிப்பு உதவியாளர் 50பேர் |
|---|---|
| ஹொட்டேல் பணியாளர்கள் 175பேர் | டக்சி ட்ரைவர் 150பேர் |

உணவு - தங்குமிடம் - விமானச்சீட்டு - மருத்துவ வசதி/வயதெல்லை 21-45

மேலதிக விபரங்களுக்கு 0777 324 004

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114426222 www.tgl.lk

SIKARAM ACADEMY Business · Hospitality · Media FAST TRACK to CAREERS 175, 1ம் குறுக்குத்தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11 www.sikaram.lk (C-125)

## Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்

புதிய சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.

கரலீனா இசை மன்றம்

4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.

தொ.பே : 077 703 1293 (1034)

## வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியும், ஸ்ரேசன் சந்தியும் இணையும் இடத்தில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 077 670 5137 (1065)

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கணனி அறிவுள்ள பெண் ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். செல்வா கொமினிகேசன் 124, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (1084)

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரிலுள்ள போட்டோ கொப்பி கடைக்கு ரைப்பிங் தெரிந்த ஆண் / பெண் வேலையாட்கள் தேவை இன்றும் நாளையும் நேரில் வரவும்.

தொடர்பு : 077 847 6541 (1085)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

0768226243

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

- அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் திடீர் அதிஸ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்.



மு.பானுதரன் - நெல்லியடி

அமெரிக்க விசா வெற்றியாளர் (C-055)

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரே | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை (C-056)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-055)

UK-550*/=Kg மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில் DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


## அமெரிக்க லொத்தர் விசா

மிகக் குறைந்த கட்டணத்தில் நேர்த்தியான முறையில் அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

செல்வா கொமினிகேசன் 124, கோயில் வீதி, யாழ்ப்பாணம். 021 222 5169 (1084)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சச்சிதானந்தம்



காரைநகர் களபூமி பொன்னாவளையை பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி மற்றும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சச்சிதானந்தம் 20.10.2017 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நவரத்தினம்-கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசினிதேவியின் அன்புக் கணவரும் சிவதருஜினி கஜேந்திரன் (மி.பா.சே. நிலையம் யாழ்நகர் (CEB), கிருஸ்ணரூபன், (பிராந்திய முகாமையாளர் - *Samsung*) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தரூபன் (காந்தன் களஞ்சியம்), வைதேகி ஆகியோரின் மாமனாரும், மதுரி, ரம்மியாவின் பாசமிகு பேரனும், கயிலைநாதன் (லண்டன்), சாம்பசிவம் (ஓய்வுநிலை பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மாவட்ட செயலகம் யாழ்), நகுலேஸ்வரன், அருந்ததிதேவி, கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரனும், குலசேகரம், தயாளினி, கலாநிதி, இரவிந்திரன், தயாநிதி, சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (22.10.2017), ஞாயிறு காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.504, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 029 1017, 076 822 9634

தகவல் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (C-122)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 27 05 1942

விண்ணில் 01 11 2016

அமரர் **சுப்பர் கந்தசாமி**

(கார்க்கார கந்தசாமி)

எங்கள் அப்பா
ஆண்டொன்று ஆனதையா உம்
அன்பு முகம் கண்டு
காவலாய் நீரிருந்த காவல் கோட்டை
கதியிழந்து போனதையா
நீர் சென்ற இடம் சிறக்குமையா இன்று
நீர் இல்லா இடம் வெறுமையே ஆனதையா
சிந்தை நொந்து போனோமையா
உம் அன்பு முகம் காணாது

கலைவாணி வீதி, சித்தன்கேணி. (1074)

உங்கள் நினைவுடன் வாழும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org